بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 30

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

18 துல் ஹஜ்ஜா 1442 ஹிஜ்ரி கமரி 29 வஃபா 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 29 ஜூலை 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَوْ اَنَّ اَهْلَ الْكِتٰبِ اٰمَنُوْا وَاتَّقَوْا لَكَفَّرْنَا عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاَدْخَلْنٰهُمْ جَنّٰتِ النَّعِيْمِ

வேதத்தையுடையவர்கள், நம்பிக்கைக் கொண்டும் இறையச்சம் கொண்டும் இருப்பார்களாயின் நிச்சயமாக நாம் அவர்களின் தீமைகளை அவர்களை விட்டும் அகற்றி நிச்சயமாக அவர்களை அருட்கொடைகளைக் கொண்ட தோட்டங்களில் நுழையச் செய்திருப்போம். (5:66)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நபித்துவம் நிறைவு பெறுவதன் பொருள் என்னவென்றால், இயற்கையாக அன்னார் (ஸல்) மீது நபித்துவத்தின் சிறப்புகள் முற்றுப் பெற்று விட்டன. அதாவது ஆதம் (அலை) அவர்களிலிருந்து மஸீஹ் இப்னு மர்யம் வரை நபிமார்களுக்கு வழங்கப்பட்டிருந்த பலதரப்பட்ட சிறப்புகள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூட்டப்பட்டது. இவ்வாறாக அன்னார் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆக திகழ்கின்றார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காத்தமுன் நபிய்யீன் என்ற அந்தஸ்து

அல்லாஹ் நமக்கு காத்தமுல் மூமினீன், காத்தல் ஆரிஃபீன் மற்றும் காத்தமுன் நபிய்யீன் என்ற நபியை வழங்கியுள்ளான். மேலும் அதேபோன்று வேதங்களில் சிறந்த வேதத்தை அல்லாஹ் அன்னாரின் மீது இறக்கியுள்ளான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள். அன்னார் மீது நுபுவ்வத் முற்றுப் பெற்று விட்டது. இந்த நபித்துவம் என்பது ஒருவரை கழுத்தை நெறித்து முடித்து விடுவதைப் போன்று முடிந்து விடவில்லை. அதுபோன்று நிறைவு பெறுவது பெருமிதத்திற்குரியதல்ல. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நபித்துவம் நிறைவு பெறுவதன் பொருள் என்னவென்றால், இயற்கையாக அன்னார் (ஸல்) அவர்கள் மீது நபித்துவத்தின் சிறப்புகள் நிறைவடைந்து விட்டன. அதாவது ஆதம் முதல் மஸீஹ் இப்னு மர்யம் வரை நபிமார்களுக்கு வழங்கப்பட்டிருந்த பலதரப்பட்ட சிறப்புகள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூட்டப்பட்டது. இவ்வாறாக அன்னார் காத்தமுன் நபிய்யீன் ஆக திகழ்கின்றார்கள். மேலும் அதேபோன்று ஏனைய பல்வேறு வேதங்களில் இருந்து வந்த போதனைகளும், இறைஞானங்களும் திருக்குர்ஆனின் மூலம் நிறைவடைந்து விட்டன. மேலும் வேதங்களில் திருக்குர்ஆன் சிறந்த வேதமாக உள்ளது.

### நாம் முழுமையான அகப்பார்வையுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நம்புகின்றோம்

இந்த இடத்தில் நாம் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று ஒப்புக் கொள்வதில்லை என்று என் மீதும், எனது ஜமாஅத்தின் மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது. இது எங்கள் மீது புனையப்படும் மாபெரும் அவதூறாகும். நாங்கள் எந்த அளவிற்கு உறுதியான ஆற்றலுடனும், ஞானத்துடனும், அகப்பார்வையுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என ஒப்புக் கொள்கிறோம் என்றால் அதில் லட்சத்தில் ஒரு பங்கு கூட அவர்கள் நம்புவதில்லை. அவர்களுக்கு அதற்கான தகுதியே இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தில் இருக்கின்ற

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

**உலகில் ஏகத்துவம் மற்றும் இணை வைத்தலின் காலகட்டம் வந்து கொண்டே இருக்கின்றது. ஏகத்துவ சமுதாயங்கள் இணை வைக்கும் சமுதாயமாக ஆகி விடுகின்றன. இணை வைக்கும் சமுதாயங்கள் ஏகத்துவ சமுதாயங்களாக ஆகி விடுகின்றன. எப்போதும் ஏகத்துவ காலகட்டம் ஷிர்க்கின் காலகட்டத்திற்கு முன்பாக வருகின்றது. இந்த விதிமுறைக்கேற்ப ஏகத்துவம் இல்ஹாமிய விஷயம் என்றும், இணை வைத்தல் வீழ்ச்சிக்குரிய ஓர் இடம் என்றும் ஒப்புக் கொள்ள நேரிடுகின்றது**

وَاِذْ قَالَ اِبْرٰهِيْمُ رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ اٰمِنًا وَّاجْنُبْنِيْ وَبَنِيَّ اَنْ نَّعْبُدَ الْاَصْنَامَ (14:36)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு தஃப்ஸீர் வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மக்காவின் பகுதிகளில் ஷிர்க் (இணைவைத்தல்) பரவும் என்ற விஷயத்தை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அறிந்திருந்தார்கள். அதன் காரணமாகவே என்னையும், எனது சந்ததிகளையும் ஷிர்க்கிலிருந்து ஒரு பக்கம் விலக்கி வைப்பாயாக என்று அன்னார் துஆ செய்தார்கள். ஏனென்றால் துஆ செய்யப்பட்ட நேரத்தில் மக்காவில் இணைவைத்தலுக்குரிய அடையாளமே இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வீடு மட்டுமே அங்கு இருந்தது. மேலும் அன்னாரை பின்பற்றக்கூடிய மக்களே அங்கு வசித்து வந்தனர். இந்த துஆவிலிருந்து இதுவும் தெரிய வருகின்றது. அதாவது ஏகத்துவம் மற்றும் இணை வைத்தலின் காலகட்டம் உலகில் வந்து கொண்டே இருக்கின்றது. ஏகத்துவ சமுதாயங்கள் இணை வைப்பவர்களாக ஆகி விடுகின்றன. இணை வைக்கும் சமுதாயங்கள் ஏகத்துவ சமுதாயங்களாக ஆகி விடுகின்றன. மேலும் ஏகத்துவத்தின் உயர்தரமான அந்தஸ்தை அடைந்த சமுதாயத்தைக் குறித்தும் கூட இனி அது இணைவைத்தலின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற்று விட்டது என்று கூற முடியாது. அதாவது ஏகத்துவம் என்பது ஷிர்க்கிலிருந்து முன்னேறி முன்னேறி உருவாகின்றது என்ற மார்க்க ஆராய்ச்சியாளர்களின் இந்த கருத்து இந்த போதனையிலிருந்து ரத்து செய்யப்படுகின்றது. திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஏகத்துவத்திற்கு பிறகு ஷிர்க்கும், ஷிர்க்கிற்கு பிறகு ஏகத்துவத்தின் காலகட்டமும் வந்து கொண்டே இருக்கின்றன. ஏகத்துவம் மற்றும் இணை வைத்தலின் காலகட்டம் உலகில் வந்து கொண்டே இருக்கின்றன. எப்போதும் ஏகத்துவ

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தான் கூறியதையெல்லாம் முழுமை செய்தார்கள். கடுமைகாட்ட வேண்டிய இடத்தில் கடுமை காட்டினார்கள். மென்மை காட்ட வேண்டிய இடத்தில் அதிக மென்மை காட்டினார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பாருங்கள்.அன்னாரின் திகில் மற்றும் ஆளுமையின் காரணமாக ஒரு பக்கம் உலகத்தின் பெரும் பெரும் அரசர்கள் அதாவது கைஸர், கிஸ்ராவின் அரசாங்கங்கள் கூட அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் மற்றொரு பக்கம் இருள் சூழ்ந்த இரவில் ஒரு காட்டரபி பெண்மணியின் பிள்ளைகளை பசியுடன் இருப்பதை பார்த்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மகத்துவமிக்க மனிதர் நிலைகுனிந்து விடுகின்றார். மேலும் தனது முதுகில் கோதுமை மாவின் மூட்டையை சுமந்து கொண்டும், நெய்யின் டப்பாவை கையில் தூக்கிக் கொண்டும் அந்த மக்களிடம் வருகின்றார். தனது கைகளால் உணவு சமைத்துக் கொடுத்து அந்த பிள்ளைகள் அதனை உண்டு அவர்கள் நிம்மதியுடன் உறங்கி விடாதவரை அவர்கள் அங்கிருந்து திரும்பவில்லை**

**மதிப்பிற்குரிய அப்துல் வஹீத் வடாயிச் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கொள்ளுப் பேத்தி மதிப்பிற்குரிய அமத்துன் நூர் சாஹிபா உட்பட நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 ஜுன் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வந்தது. அதுபற்றி நான் இன்று மேலும் எடுத்துரைப்பேன்.

ஸைது பின் அஸ்லம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னாருடைய தந்தையார் அன்னாரிடம் இவ்வாறு கூறினார்: நான் ஒரு முறை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடன் ஹர்ரா வாகிம் (என்ற இடத்தை) நோக்கிச் சென்றேன். அது குன்றுகளுக்கு இடையிலுள்ள இடமாகும். ஹர்ரா என்பது கரும்பாறைகளைக் கொண்ட நிலத்திற்கு கூறப்படும். மதீனாவின் கிழக்குப் பக்கத்தில் ஹர்ரா வாகிம் உள்ளது. அதனை ஹர்ரா பனூ குரைலா என்றும் கூறுவார்கள். இரண்டாவது ஹர்ரத்துல் வபுரா என்ற இடமாகும். அது மதீனாவிற்கு மேற்குப் பக்கத்தில் மூன்று மைல் தொலைவில் உள்ளது.

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்: நான் அங்கு சென்றேன். நாங்கள் ஸிரார் என்ற இடத்தை அடைந்தபோது ஓரிடத்தில் ஒரு நெருப்பின் ஒளி மூட்டப்பட்டிருந்தது. ஸிரார் என்ற இடமும் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. சலீமே! எங்களுடன் வாரும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அநேகமாக அவர் ஒரு பயணியாக இருப்பார். அவரை இரவும் குளிரும் தடுத்திருந்தது என்று நான் கருதுகின்றேன். எனவே நாங்கள் வேகமாக சென்றவாறு அவருக்கு அருகில் சென்றோம். அப்போது ஒரு பெண்ணுடன் அவரது சில குழந்தைகளும் இருந்ததைக் கண்டோம். அவர் அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்திருந்தார். அவரது பிள்ளைகள் பசியின் காரணமாக அழுது கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அஸ்ஸலாமு அலைக்கும். ஒளியூட்டக்கூடியவர்களே! அன்னார் நெருப்பு மூட்டியவர்கள் என்று கூற விரும்பவில்லை. மாறாக, ஒளியுடையவர்களே என்று கூறினார்கள். வ அலைக்கும் ஸலாம் என்று அந்தப் பெண்மணி கூறினார். நான் அருகில் வரலாமா என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண்மணி, நன்மையுடன் வாருங்கள். இல்லையென்றால் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறினார்கள். அதன் பொருள் என்னவென்றால், நல்ல விஷயம் பேச வேண்டும் என்றால் வாருங்கள். இல்லையென்றால் திரும்பிச் சென்று விடுங்கள் என்பதாகும். அன்னார் அருகில் சென்றார்கள். பின்னர் உங்களுக்கு என்னவாயிற்று? என்று அன்னார் கேட்டார்கள்.

அதற்கு இரவும், குளிரும் எங்களை இங்கு தடுத்து நிறுத்தியுள்ளது என்று அந்தப் பெண்மணி கூறினார். இந்தப் பிள்ளைகளுக்கு என்னவாயிற்று? இவர்கள் ஏன் அழுகின்றார்கள்? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு பசியின் காரணமாக அழுகின்றனர் என்று அந்தப் பெண்மணி கூறினார். இந்தப் பாத்திரத்தில் என்ன உள்ளது? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதனுள் வெறும் தண்ணீர் மட்டுமே உள்ளது. நான் இதன் மூலமாக பிள்ளைகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் தூங்கி விட வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கின்றேன் என்று அந்தப் பெண்மணி கூறினார். எங்களுக்கும் உமருக்கும் இடையில் அல்லாஹ் தீர்ப்பு வழங்குவான் என்றும் அந்தப் பெண்மணி கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பெண்மணியே! அல்லாஹ் உம்மீது கருணை காட்டுவானாக. உனது நிலைமை உமருக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் எங்கள் விவகாரங்களின் கண்காணிப்பாளர் ஆவார். மேலும் எங்களிடமிருந்து அவர் கவனமற்றவராக இருக்கின்றார் என்று அந்தப் பெண்மணி கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் இருந்த அஸ்லம் கூறுகின்றார்கள்: பின்னர் அன்னார் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம் வந்தார்கள். மேலும் எம்முடன் செல்லுங்கள் என்று கூறினார்கள். பின்னர் நாங்கள் விரைவாக சென்றவாறு தாருத் தகீக் என்ற இடத்தை அடைந்தோம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது பதவிக் காலத்தில் தாருக் தகீக் என்ற பெயருடைய ஒரு கட்டிடத்தை கட்டியிருந்தார்கள். அதில் கோதுமை மாவு, நெய், மைதா, பேரீத்தம் பழம், கிஷ்மிஷ் மற்றும் ஒரு பயணிக்கு தேவைப்படுகின்ற ஏனைய அவசியமான பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனா மற்றும் மக்காவிற்கிடையிலான வழிப்பாதையில் பயணிகளுக்காக சில தங்கும் விடுதியையும் உருவாக்கி இருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் அங்கிருந்து ஒரு மூட்டையில் தானியங்களை எடுத்தார்கள். பின்னர் அன்னார் இதை தூக்கி எனது தோளில் வையுங்கள் என்று கூறினார்கள். அதற்கு தங்களுடைய இடத்தில் நான் அதை சுமந்து கொள்கிறேன் என்று அஸ்லம் கூறினார். இதை என்மீது சுமத்துங்கள் என்று இரண்டு அல்லது

மூன்று முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தங்களுக்குப் பகரமாக நான் அதை சுமந்து கொள்கின்றேன் என்று ஒவ்வொரு முறையும் நான் கூறினேன்.

இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கியாமத் நாளன்று எனது சுமையை நீங்கள் சுமப்பீர்களா? என்று கேட்டார்கள். அப்போது நான் அந்த மூட்டையை அன்னார் மீது வைத்தேன். பின்னர் அன்னார் அந்த மூட்டையை தனது இடுப்பில் சுமந்து கொண்டு வேகமாக நடந்தார்கள். நானும் அன்னாருடன் வேகமாக நடந்து சென்றேன். எந்த அளவுக்கு என்றால் நாங்கள் அந்த பெண்மணியை சென்றடைந்தோம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மூட்டையை அந்தப் பெண்ணிற்கு அருகில் சென்று இறக்கினார்கள். மேலும் அதிலிருந்து சிறிது கோதுமை மாவை எடுத்தார்கள். மேலும் இதனை பாத்திரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக போடுங்கள். நான் உங்களுக்காக அதை கிண்டி விடுகின்றேன் என்று அந்தப் பெண்மணியிடம் கூறினார்கள்.

மற்றோரிடத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: கொஞ்சம் கொஞ்சமாக கோதுமை மாவை போடுங்கள். நான் உங்களுக்காக ஹரீராவை (ஒரு வகையான உணவு) தயார் செய்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உலைக்கு கீழே நெருப்பை எரியூட்டச் செய்வதற்கு ஊதிக் கொண்டிருந்தார்கள்.

அஸ்லம் சாஹிப் அதாவது அறிவிப்பாளர் இவ்வாறு கூறுகின்றார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிக பெரிய மற்றும் அடர்த்தியான தாடி வைத்திருந்தார்கள். புகை அன்னாரின் தாடிக்குள் ஊடுருவிச் சென்றதை நான் கண்டேன். அதாவது புகை கிளம்பியபோது அது அன்னாரின் முகத்திலும் பட்டுக் கொண்டிருந்தது. தாடியினுள் கடந்து சென்றது. உணவு சமைக்கப்பட்டபோது அன்னார் பாத்திரத்தை கீழே இறக்கினார்கள். ஏதாவதொரு பாத்திரம் கொண்டு வாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். ஒரு பெரிய தட்டை அந்தப் பெண்மணி கொண்டு வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதில் உணவை கொட்டினார்கள். இந்தக் குழந்தைகளுக்கு இதனை கொடுப்பீராக. நான் உங்களுக்காக அதனை குளிரச் செய்கின்றேன் என்று கூறினார்கள். அதாவது அந்த உணவை மற்றொரு பாத்திரத்தில் கொட்டி குளிரச் செய்வதற்காக பரப்பினார்கள். பின்னர் அன்னார் தொடர்ந்து அப்படியே செய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அந்தப் பிள்ளைகள் வயிறு நிறைய உண்டு விட்டார்கள். எஞ்சியதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் விட்டு விட்டார்கள்.

அஸ்லம் கூறுகின்றார்: பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். நானும் அன்னாருடன் எழுந்து விட்டேன். அப்போது அல்லாஹ் தங்களுக்கு சிறந்த நற்கூலியை வழங்குவானாக என்று அந்தப் பெண்மணி கூறினார். இந்த விவகாரத்தில் நீங்கள் அமீருல் மூமினீன் அவர்களை விடவும் அதிக தகுதிபடைத்தவர் ஆவீர்கள். (அதாவது நற்கூலி பெறுவதற்கு). அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நல்ல விஷயங்களை பேசுங்கள். நீங்கள் அமீருல் மூமினீன் அவர்களிடம் செல்லும்போது, இன்ஷா அல்லாஹ் நீங்கள் அங்கு என்னை காண்பீர்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள். மேலும் அந்தப் பெண்மணியை நோக்கி ஓரிடத்தில் அமர்ந்து விட்டார்கள். இதைத்தவிர்த்து வேறெதுவும் பணி உள்ளதா? என்று நான் அன்னாரின் சமூகத்தில் முறையிட்டேன். அதற்கு அன்னார் என்னிடம் எதுவும் பேசவில்லை. எந்த அளவுக்கென்றால் பிள்ளைகள் ஒருவர் மற்றவருடன் விளையாடிக் கொண்டிருப்பதையும், சிரித்துக் கொண்டிருப்பதையும் நான் கண்டேன். எல்லாப் பிள்ளைகளும் நிம்மதியாக தூங்கி விட்டனர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இறைவனுக்கு நன்றி கூறியவாறு எழுந்து நின்றார்கள். மேலும் என்னை நோக்கி முகம் திருப்பியவாறு கூறினார்கள்: அஸ்லமே! பசியின் காரணமாக இந்தப் பிள்ளைகள் கண் விழித்துக் கொண்டிருந்தனர். மேலும் அழுது கொண்டிருந்தனர். நான் இந்தப் பிள்ளைகளை நிம்மதியான நிலையில் பார்க்காத வரை இங்கிருந்து செல்லக்கூடாது என்று நான் விரும்பியிருந்தேன் என்று அன்னார் கூறினார்கள்.

(தாரீக் தப்ரி லி இப்னி ஜரீர் தொகுதி 2 பக்கம் 567, 568 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: மனிதனின் அடிப்படை தேவைகளை அதாவது அத்தியாவசியப் பொருட்களை சேகரித்துக் கொள்ள முடியாதவர்களுக்கு அதை ஏற்படுத்திக் கொடுப்பது இஸ்லாமிய அரசாங்கத்தின் கடமையாகும். அது இஸ்லாமிய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று அன்னார் கூறுகின்றார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சம்பவம் உள்ளது. அது உண்மையை வெளிப்படுத்தும் சம்பவமாகும். ஒரு முறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த ஒரு முஸ்லிமிற்கும் துன்பங்கள் ஏதும் உள்ளதா? என்று வெளியில் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். தாருல் கிலாஃபா மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் மரார் என்ற ஒரு பெயருடைய கிராமம் ஒன்று இருந்தது. எமது ஆராய்ச்சியாளர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அநேகமாக அது மரார் அல்ல. மாறாக, ஸிரார் என்பதே அதன் பெயராகும். எழுத்தாளரின் தவறின் காரணமாக மரார் என்று எழுதப்பட்டிருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் ஒருபுறமிருந்து அழு குரல் வந்து கொண்டிருந்ததை அங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கண்டார்கள். பின்னர் அங்கு சென்றபோது ஒரு பெண்மணி ஏதோ சமைத்துக் கொண்டிருப்பதை அன்னார் கண்டார்கள். மேலும் இரண்டு, மூன்று பிள்ளைகள் அழுது கொண்டிருந்தனர். என்ன விஷயம்? என்று அன்னார் அந்தப் பெண்மணியிடம் கேட்டார்கள். அதற்கு, இரண்டு மூன்று வேளை பட்டினியாக இருக்கின்றோம். உண்பதற்கு எதுவும் இல்லை என்று அந்தப் பெண்மணி கூறினார். பிள்ளைகள் மிகவும் நிம்மதியிழந்திருக்கின்றனர். நான் அவர்களை ஏமாற்றி தூங்க வைப்பதற்காக இவ்வாறு அடுப்பை மூட்டி இருக்கின்றேன் என்றும் கூறினார்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாக மதீனாவை நோக்கி திரும்பிச் சென்றார்கள். கோதுமை மாவு, நெய், இறைச்சி, பேரீத்தம் பழம் ஆகியவற்றை எடுத்தார்கள். ஒரு மூட்டையில் போட்டு அதனை எனது முதுகில் தூக்கி வையுங்கள் என்று தனது வேலைக்காரரிடம் கூறினார்கள். அதற்கு ஹுஸூர்! நான் இருக்கின்றேன். நான் தூக்கிக் கொள்கின்றேன் என்று அவர் கூறினார். நிச்சயமாக இப்போது நீங்கள் தூக்கிக் கொண்டு செல்வீர்கள். ஆனால் கியாமத் நாளன்று எனது சுமையை யார் சுமப்பார்? என்று அன்னார் பதிலளித்தார்கள். அதாவது அந்த மக்களின் உணவை கருத்தில் கொள்வது எனது கடமையாக இருந்தது. அந்தக் கடமையில் என்னிடம் தவறு ஏற்பட்டு விட்டது. எனவே அதற்கு பரிகாரம் என்னவென்றால், நானே சுமந்து கொண்டு இதனை எடுத்துச் செல்ல வேண்டும். மேலும் அவர்களின் வீட்டில் அதை சென்றடையச் செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இந்த சம்பவத்திலிருந்து தேவையுடையவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை என்பது சோம்பேறித்தனத்தை உருவாக்குவதற்காகத் தான் என்று எவரும் பொருள் கொள்ளக்கூடாது. மாறாக, ஒவ்வொரு ஏழைக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும்.

அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஏழைகளை கருத்தில் கொள்ளுமாறு எங்கு இஸ்லாம் கட்டளையிடுகின்றதோ அங்கு ஏற்கனவே இது தொடர்பாக கூறப்பட்டதற்கிணங்க சோம்பேறித்தனத்தையும் இஸ்லாம் அழிக்கின்றது. சோம்பேறித்தனத்தை ஏற்படுத்துவதற்காக உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. மக்கள் பணியை விட்டு விட்டு சும்மா அமர்ந்து கொள்ள வேண்டும் என்பது உதவித் தொகை வழங்கப்படுவதன் நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, மிகவும் நிர்பந்தத்திற்குள்ளான நபர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்பட்டது. ஏனென்றால் யாசிப்பதிலிருந்து மக்கள் தடுக்கப்பட்டு

வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யாசிப்பவர்களை யாசிப்பதிலிருந்து தடுப்பதற்காகவும் மிகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வந்தார்கள். இது மட்டுமல்ல அதாவது பசித்தவரை கண்ட உடன் அவருக்கு உதவி வழங்கி விடுவதோ அல்லது யாசிப்பவர் ஒருவர் வந்தால் அவருக்கு ஒன்றை கொடுத்து விடுவதோ மட்டுமல்ல. மாறாக, யாசிப்பவர் நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருந்தால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து வந்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யாசிப்பவர் ஒருவரை கண்டார்கள். அவரது மடி கோதுமை மாவால் நிரம்பி இருந்தது. கோதுமை மாவு அவரது மடியில் இருந்தது. மேலும் அவர் யாசித்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடமிருந்து கோதுமை மாவை வாங்கி ஒட்டகங்களுக்கு முன்னால் வீசி விட்டார்கள். மேலும் அவரது மடியை காலி செய்து விட்டார்கள். இப்போது நீ யாசி என்று கூறினார்கள். இதேபோன்று யாசிப்பவர்களை வேலை செய்யும்படி நிர்பந்தித்து வந்தார்கள் என்பதும் நிரூபணமாகிறது.

(அஹ்மதிய்யத் யானீ ஹகீகி இஸ்லாம், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 296, 297)

அதாவது நீங்கள் நல்ல உடல் ஆரோக்கியமான மனிதராக இருக்கும்போது பிச்சை எடுப்பதற்கு உங்களுக்கு என்ன அவசியம் வந்து விட்டது? உழையுங்கள், சம்பாதியுங்கள்; உண்ணுங்கள். மீண்டும் யாசித்தால் பின்னர் உங்களிடமிருந்து பிடுங்கி விலங்குகளுக்கு முன்னால் வீசப்படும். இவ்வாறே உங்களுடன் நடந்து கொள்ளப்படும் என்ற பாடத்தையே அன்னார் வழங்கினார்கள். பெரும்பாலான யாசிப்பவர்கள் இந்தவொரு உதாரணத்தைக்கூறி இவ்வாறு மிகவும் அழுத்தம் கொடுக்கின்றனர். பாருங்கள்! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏழைகளை எவ்வாறு கருத்தில் கொண்டார்கள் என்று கூறுகின்றனர். ஆனால் யாசிப்பதிலிருந்து இஸ்லாம் எவ்வாறு கடுமையாக தடுக்கின்றது என்பதை அவர்கள் பார்ப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையும் இவ்வாறே இருந்துள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பின்னர் அதை அப்படியே தொடர்ந்தார்கள். இதனை அவர்கள் பார்ப்பதில்லை.

பின்னர் ஒரு சம்பவத்தை வேறொரு இடத்தில் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பாருங்கள்.அன்னாரின் திகில் மற்றும் ஆளுமையின் காரணமாக ஒரு பக்கம் உலகத்தின் பெரும் பெரும் அரசர்கள் அதாவது கைஸர், கிஸ்ராவின் அரசாங்கங்கள் கூட அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் மற்றொரு பக்கம் இருள் சூழ்ந்த இரவில் ஒரு காட்டரபி பெண்மணியின் பிள்ளைகளை பசியுடன் இருப்பதை பார்த்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மகத்துவமிக்க மனிதர் நிலைகுனிந்து விடுகின்றார். மேலும் தனது முதுகில் கோதுமை மாவின் மூட்டையை சுமந்து கொண்டும், நெய்யின் டப்பாவை கையில் தூக்கிக் கொண்டும் அந்த மக்களிடம் வருகின்றார். அவர்கள் தனது கைகளால் உணவு சமைத்துக் கொடுத்து அந்த பிள்ளைகள் அதனை உண்டு அவர்கள் நிம்மதியுடன் உறங்கி விடாதவரை அவர்கள் அங்கிருந்து திரும்பவில்லை.

(ஸேரே ரூஹானீ(6) அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 596)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அஸ்லம் அறிவிக்கின்றார். அது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. அன்னார் கூறுகின்றார்கள்:

மதீனாவில் வியாபாரிகளின் ஒரு குழு வந்தது. அவர்கள் பெருநாள் திடலில் தங்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடம் இரவு நேரத்தில் நாம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதை நீங்கள் விரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். ஆம் என்று அன்னார் கூறினார்கள். எனவே அவர்கள் இருவரும் முழு இரவும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருந்தனர். மேலும் இறைவணக்கமும் செய்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு குழந்தையின் அழு குரலை கேட்டார்கள். எனவே அன்னார் அதனை நோக்கி சென்று விட்டார்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உங்களது பிள்ளைகளை நல்ல முறையில் கருத்தில் கொள்ளுங்கள் என்று அந்தப் பிள்ளையின் தாயிடம் கூறினார்கள். இதைக் கூறிவிட்டு அன்னார் திரும்பி வந்து விட்டார்கள். அதாவது அந்த இடத்திலிருந்து அன்னார் திரும்பி வந்து விட்டார்கள். அதாவது அன்னார் எங்கு பொருட்களின் பாதுகாப்பிற்காக அமர்ந்திருந்தார்களோ அங்கு மீண்டும் அன்னார் அழு குரலை கேட்டார்கள். அன்னார் மீண்டும் அந்தத் தாயிடம் சென்றார்கள். முன்பே இரவில் கூறப்பட்டது போன்று மீண்டும் கூறினார்கள். பின்னர் தமது இடத்திற்கு திரும்பி வந்து விட்டார்கள். இரவின் இறுதிப் பகுதி ஆனபோது அன்னார் அந்தப் பிள்ளையின் அழு குரலை கேட்டார்கள். அப்போது அந்தத் தாயிடம் அன்னார் சென்றார்கள். உன்மீது நாசம் உண்டாகட்டும். நீ மிகவும் கவனமற்ற தாயாக இருக்கின்றாய். இரவு முழுவதும் அழுகையின் காரணமாக உனது குழந்தை நிம்மதியற்று இருப்பதை நான் காண்கின்றேன் என்று கூறினார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் அடியாரே! நான் இந்தக் குழந்தைக்கு தாய்ப்பாலை மறக்கடிக்கச் செய்து ஏனைய உணவின் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றேன். ஆனால் இந்தப் பிள்ளை மறுத்து வருகின்றது. தனக்கு பாலூட்டும்படி அது கூறுகின்றது. ஏன் அப்படி? என்று அன்னார் கேட்டார்கள். அந்தப் பெண்மணி கூறினார்: ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிள்ளைகளுக்கு அதாவது பால்குடியை மறந்து விட்ட குழந்தைகளுக்கு மட்டுமே உதவித் தொகையை நிர்ணயித்துள்ளார்கள் என்று கூறினார். உங்களது பிள்ளைக்கு என்ன வயதாகின்றது? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு இத்தனை ஆண்டு மற்றும் இத்தனை மாதம் என்று அந்தப் பெண்மணி பதிலளித்தார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உன்மீது நாசம் உண்டாகட்டும். தாய்ப்பாலை மறக்கடிக்க ஏன் இவ்வளவு அவரசம் செய்தீர்? ஏன் இவ்வளவு அவசரம் காட்டினீர்கள்? என்று கேட்டார்கள். பின்னர் அன்னார் மக்களுக்கு ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். அப்போது அன்னாரின் அழுகையின் காரணமாக மக்களுக்கு திருக்குர்ஆன் வசனங்கள் தெளிவாக புலப்படவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்மைத்தாமே கடிந்து கொண்டார்கள். உமரே! நீர் எத்தனை முஸ்லிம் பிள்ளைகளை கொன்று விட்டீரோ? என்று அன்னார் தமக்குத்தாமே கூறிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் வீதிகளில் அறிவிப்புச் செய்பவருக்கு கட்டளையிட்டார்கள்: உங்களது பிள்ளைகளுக்கு தாய்ப்பாலை மறக்கடிப்பதில் நீங்கள் அவசரம் காட்டாதீர்கள் என்று அன்னார் அறிவிப்புச் செய்ய வைத்தார்கள். இஸ்லாத்தில் பிறக்கின்ற பிள்ளைகள் அனைவருக்கும் அதாவது இனி பிறக்கின்ற அனைத்து பிள்ளைகளுக்கும் நாம் உதவித் தொகையை நிர்ணயம் செய்கின்றோம் என்றும் அன்னார் அறிவிப்புச் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைத்து நாடுகளுக்கும் இந்தக் கட்டளையை அனுப்பி வைத்தார்கள்.

(அல்பதாயத்துன் நஹானிய்யா லி இப்னி கஸீர் தொகுதி 10 பக்கம் 185–186 – 1988 ஆம ஆண்டு தாருல் ஹிஜ்ரில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது நடைமுறைக்கேற்ப இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துவக்கத்தில் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு எந்த உதவித் தொகையும் நிர்ணயம் செய்யவில்லை. ஆனால் பின்னர் பால்குடி குழந்தைகளின் உரிமைகளையும் அங்கீகரித்து விட்டார்கள். அவர்களுக்குரிய பங்கு அவர்களின் தாய்மார்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். குழந்தை தாய்ப்பால் குடித்துக் கொண்டிருக்கும் வரை அது சமுதாயத்தின் அங்கமாக இருக்காது என்று முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புரிந்திருந்தார்கள். அந்த குழந்தையின் பொறுப்பு அதன் தாய் மீது உள்ளது. சமுயத்திற்கு இல்லை. அதாவது அதனுடைய செலவுகளை பைத்தல் மாலிலிருந்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அன்னார் கருதினார்கள். ஆனால் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நடைபயிற்சிக்காக வெளியில் சென்றார்கள். நகரத்திற்கு வெளியில் காட்டரபிகளின் ஒரு குழு

வந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கூடாரத்திலிருந்து குழந்தையின் அழு குரலை கேட்டார்கள். குழந்தை ஏங்கிக் கொண்டிருந்தது. தாய் அதை தட்டிக் கொடுத்து தூங்க வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். தட்டிக் கொடுத்து நீண்ட நேரம் ஆன பிறகும் கூட குழந்தை அமைதியாகவில்லை. அப்போது அந்தத் தாய் அந்த குழந்தையை அடித்து விட்டு, அழு! உமருக்காக அழு என்று கூறினாள்.

இந்த விஷயத்துடன் தமக்கு என்ன தொடர்பு உள்ளது? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் பெண்மணியின் கூடாரத்திற்குள் நுழைந்தார்கள். என்ன விஷயம்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைவருக்கும் உதவித் தொகை நிர்ணயித்துள்ளார்கள். ஆனால் தாய்ப்பால் குடிக்கும் இந்த குழந்தைகளுக்கும் உணவின் தேவை உள்ளது என்பதை உமர் அறிந்திருக்கவில்லை என்று அவர் கூறினார். இப்போது என்னிடம் முழுமையாக தாய்ப்பால் இல்லை. நான் இந்தக் குழந்தையின் தாய்ப்பாலை மறக்கடித்து விட்டேன். இதற்குரிய உதவித்தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காக தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விட்டேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போதே அங்கிருந்து திரும்பினார்கள். அன்னார் கருவூலத்திலிருந்து கோதுமை மாவு மூட்டையை வெளியேற்றினார்கள். அதனை சுயமே சுமந்து கொண்டு வந்தார்கள். கருவூலத்தின் காவலாளியாக இருந்த நபர் முன்னால் சென்று நாங்கள் இதனை சுமந்து கொண்டு செல்கின்றோம் என்று கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விட்டு விடுங்கள். நானே இதனை சுமந்து கொண்டு செல்வேன் என்று கூறினார்கள். கியாமத் நாளன்று எனக்கு சாட்டை அடி விழும்போது எனது இடத்தில் நீ பதில் அளிப்பாயா? என்று கேட்டார்கள். இவ்வாறு என் மூலம் எத்தனை பிள்ளைகள் இறந்து விட்டன? என்பது எனக்குத் தெரியவில்லை என்றும் கூறினார்கள். இதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் உதவித் தொகை நிர்ணயம் செய்யப்படும் என்று கட்டளை பிறப்பித்தார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 27 பக்கம் 353)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹதீஸில் அம்மாரா பின் ஹுஸைமா அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எனது தந்தையிடம் இவ்வாறு கூறினார்கள்: உமது நிலத்தில் மரங்களை நடுவதிலிருந்து எந்த விஷயம் உம்மைத் தடுத்தது? என்று கேட்டார்கள். அவர் கூடுதலாக மரம் ஏதும் நடாமல் இருந்தார். தனது தோட்டத்தை பராமரிக்காமல் இருந்தார். கெட்ட செடிகளை அகற்றி விட்டு அதன் இடத்தில் புதிய செடிகள் எதுவும் பயிரிடாமல் இருந்தார். அப்போது எனக்கு வயதாகி விட்டது என்று எனது தந்தை பதிலளித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மரத்தை நடுவது உங்கள் மீது அவசியமாகும். நாளை நான் மரணித்து விடுவேன். எனக்கு என்ன நன்மை ஏற்படும் என்று அவர் கூறினார். (இது ஒன்றும் ஆதாரமில்லை. கண்டிப்பாக நீங்கள் மரம் நட வேண்டும் என்ற கட்டாயமில்லை). பின்னர் நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பார்த்தேன். அன்னார் எனது தந்தையுடன் இணைந்து கொண்டு மரத்தை நட்டிக் கொண்டிருந்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 92)

சோம்பேறித்தனம் மற்றும் இயலாமையிலிருந்து தப்பிப்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்:

முந்தைய தலைமுறையினர் வைத்த மரங்களின் கனிகளை நீங்கள் உண்டு கொண்டிருக்கின்றீர்கள். எனவே அடுத்த தலைமுறையினருக்காக நீங்கள் மரங்களை விட்டு விட்டுச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவில் உலா வந்தார்கள். ஓர் இரவில் ஒரு முறை நகரத்தில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண்மணி காதல் கவிதையை படித்துக் கொண்டிருப்பதை அன்னார் கேட்டார்கள். பகலில் அன்னார் விசாரணை செய்தபோது அவரது கணவர் நீண்ட காலமாக வெளியூரில் இருப்பது தெரிய வந்தது. படையுடன் வெளியூர் சென்றிருந்தார். அதன் பிறகு அன்னார் இவ்வாறு கட்டளை வழங்கி விட்டார்கள்: அதாவது இதற்குப் பிறகு எந்தவொரு இராணுவ வீரரும் நான்கு மாதத்தை விட கூடுதலாக வெளியில் இருக்கக்கூடாது என்று அன்னார் கட்டளையிட்டார்கள். ஒரு இராணுவ வீரர் நீண்ட காலம் வரை வெளியூரில் தங்கியிருக்க விரும்பினால் அவர் தமது மனைவியையும் தம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் நான்கு மாதத்திற்குப் பிறகு வலுக்கட்டாயமாக இராணுவத்திலிருந்து படையின் தளபதி அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்து விட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 4 பக்கம் 63 – 1914 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இதனுடைய விளக்கம் ஓரிடத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கவிதை படித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியிடம் அவரது கவிதையை கேட்டு நீங்கள் தீமைக்கான எந்த எண்ணமும் கொள்ளவில்லையே? என்று கேட்டார்கள். நான் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகின்றேன் என்று அந்தப் பெண்மணி கூறினார். உங்களை நீங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள் என்று அந்தப் பெண்மணியிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவருக்கு நான் இப்போதே கடிதம் அனுப்புகின்றேன். அதாவது உமது கணவருக்கு இப்போதே நான் கடிதம் எழுதுகின்றேன் என்று கூறினார்கள். எனவே அன்னார் அவரை திரும்ப அழைப்பதற்காக அவரிடம் ஒரு நபரை அனுப்பி வைத்தார்கள். பின்னர் அன்னார் மேலும் விசாரணை நடத்தினார்கள். பின்னர் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அதிகபட்சமாக நான்கு மாதங்களை அன்னார் நிர்ணயித்தார்கள். இந்த காலகட்டத்திற்கு அதிகமாக கணவர் வெளியில் இருக்கக்கூடாது அல்லது மனைவி மக்கள் அவருடன் இருக்க வேண்டும்.

(தாரீகுல் குலஃபா பக்கம் 111 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அதே அடிமை அஸ்லம் அறிவிக்கின்றார்:

நான் ஓர் இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மதீனாவின் புறநகர் பகுதிக்கு சென்றேன். அங்கு எங்களுக்கு ஒரு கூடாரம் தென்பட்டது. நாங்கள் அந்த கூடாரத்தை நோக்கி செல்ல எண்ணினோம். அப்போது நாங்கள் கண்ட காட்சி என்னவென்றால், அந்தக் கூடாரத்தில் ஒரு பெண்மணி பிரசவ வழியில் அழுது கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் அவரது நிலைமையை விசாரித்தார்கள். அப்போது அந்தப் பெண்மணி நான் வெளியூரிலிருந்து வந்த பெண் பயணி ஆவேன். என்னிடம் எதுவும் இல்லை என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுதார்கள். மிக விரைவாக தமது வீட்டிற்கு திரும்பினார்கள். தனது மனைவி ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் பின்த் அலி (ரலி) அவர்களிடம் நீங்கள் நற்கூலி பெற விரும்புகின்றீர்களா? அல்லாஹ் உங்களிடம் கொண்டு வந்துள்ள நற்கூலியை நீங்கள் பெற விரும்புகின்றீர்களா? என்று அன்னார் கேட்டார்கள். முழு விஷயத்தையும் அன்னார் அவர்களிடம் கூறினார்கள். அப்போது

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

அவர்கள் ஆம் நிச்சயமாக என்று பதிலளித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது முதுகில் கோதுமை மாவையும், நெய்யையும் சுமந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்கள் பிரசவத்திற்கு தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இருவரும் வந்தனர். ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்கள் அந்தப் பெண்ணிடம் சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் பெண்ணின் கணவருடன் அமர்ந்து கொண்டார்கள். அவருடைய கணவரும் அங்குதான் இருந்தார். அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அடையாளங்கண்டு கொள்ளவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாருடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண் மகனை ஈன்றெடுத்தார். ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்து விஷயத்தை கூறினார்கள். மேலும் அமீருல் மூமினீன் அவர்களே! உங்களது தோழருக்கு மகன் பிறந்துள்ள நற்செய்தியை கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். அதாவது அந்தப் பெண்ணின் கணவருக்கு மகன் பிறந்துள்ள நற்செய்தியை கொடுக்கும்படி கூறினார்கள். ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்களின் இந்த விஷயத்தைக் கேட்ட பிறகு தான் அந்த நபருக்கு தெரிய வந்தது. மேலும் அவர் அதை உணர்ந்து கொண்டார். அவர் யாருடன் அமர்ந்திருந்தார் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. மேலும் எத்தனை மகத்துவமிக்க நபருடன் அவர் அமர்ந்திருந்தார் என்பதையும் அவர் அறியவில்லை. அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வருத்தம் தெரிவிக்க தொடங்கினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதில் ஒன்றும் இல்லை என்று கூறினார்கள். பின்னர் அன்னார் அவருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொடுத்து விட்டு திரும்பி வந்து விட்டார்கள்.

(அல்பதாயத்துன் நஹாயா லி இப்னி கஸீர் தொகுதி 10 பக்கம் 186 – 1988 ஆம் ஆண்டு தாருல் ஹிஜ்ரில் அச்சிடிக்கப்பட்டது)

ஸயீத் பின் முஸைய்யப் மற்றும் அபூ சல்மா பின் அப்துர் ரஹ்மான் ஆகியோர் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எதைக் கூறினாலும் அதனை முழுமை செய்து விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் எந்தப் பெண்களின் கணவன்மார்கள் வெளியூர் சென்றிருந்தார்களோ அவர்களிடம் சென்றார்கள். அவர்களின் வீடுகளின் வாசலை அடைந்து அவர்களுக்கு சலாம் கூறுவார்கள். உங்களுக்கு ஏதும் தேவை உள்ளதா? அல்லது நீங்கள் அத்தியாவசியப் பொருட்கள் எதையும் வாங்க விரும்புகின்றீர்கள் என்றால் அதைக் கூறுங்கள். நான் சந்தையிலிருந்து அதை வாங்கி வருகின்றேன் என்று கூறுவார்கள். பொருட்களை வாங்குவதில் நீங்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகுவதை நான் விரும்பவில்லை என்று அன்னார் கூறுவார்கள்.

அப்போது அந்தப் பெண்கள் அன்னாருடன் தமது ஆண் அல்லது பெண் குழந்தைகளை அனுப்பி வைத்து விடுவார்கள். அன்னார் தெரு வீதியில் இவ்வாறு செல்வார்கள். அதாவது அன்னாருக்குப் பின்னால் மக்களின் பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் எந்த அளவிற்கு செல்வார்கள் என்றால் அவர்களை எண்ணுவது கடினமாக இருந்தது. பின்னர் அன்னார் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள். எந்தப் பெண்களுக்கு பிள்ளைகளே இல்லையோ அவர்களுக்காக சுயமே பொருட்களை வாங்குவார்கள். ஒரு படையிலிருந்து தூதுவர் வரும்போது அவரிடமிருந்து அந்தப் பெண்களின் கணவன்மார்களின் கடிதங்களை சுயமே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு கிடைக்கச் செய்வார்கள். மேலும் உங்களது கணவர் அல்லாஹ்வின் வழியில் சென்றிருக்கின்றார். நீங்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நகரத்தில் இருக்கின்றீர்கள். இந்த கடிதத்தை படிப்பதற்கு உங்களுடன் யாரும் இருந்தால் சரி. இல்லையென்றால் கதவுக்கே அருகே நின்று கொள்ளுங்கள். நான் உங்களுக்கு வாசித்துக் காட்டுகின்றேன் என்று கூறுவார்கள். மேலும் எமது தூதுவர் இன்ன இன்ன நாட்களில் செல்வார். உங்களது கடிதத்தை அனுப்பி வைக்க கடிதத்தை கொடுத்து அனுப்புங்கள். நாம் உங்களது கடிதத்தை அனுப்பி வைப்போம் என்று கூறுவார்கள்.

பின்னர் அனைத்து பெண்களிடத்திலும் காகிதத்தையும், மையையும் எடுத்துக் கொண்டு செல்வார்கள். அவர்களில் கடிதம் எழுதத் தெரிந்தவர்களிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். எவர்களுக்கு கடிதம் எழுத முடியவில்லையோ அவர்களிடம் இதோ காகிதமும், மையும் உள்ளது. நீங்கள் கதவுக்கு அருகே வந்து நில்லுங்கள். கூறுங்கள் நான் எழுதுகின்றேன் என்று கூறுவார்கள். இவ்வாறு ஒவ்வொருவருடைய வாசலுக்கும் செல்வார்கள். அவர்களின் கணவன்மார்களுக்கு அவர்கள் சார்பாக கடிதம் எழுதுவார்கள். பின்னர் அந்த கடிதங்களை அனுப்பி வைத்து விடுவார்கள்.

(ஷா வலியுல்லாஹ் சாஹிப் தெஹ்லவி அவர்கள் எழுதிய இஸாலத்துல் குலஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா என்ற நூல் தொகுதி 3 பக்கம் 228, 229 – கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒட்டகத்தின் கடிவாளத்தை தோளில் வைத்தவாறு அபூதஹ் என்ற இடத்தை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்தை நான் கண்டேன். இந்த அபூதஹ் என்ற இடமும் மக்கா மற்றும் மினாவிற்கு அருகிலுள்ள ஒரு இடத்தின் பெயராகும்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! எங்கே செல்கின்றீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு சதகாவிற்குரிய ஓர் ஒட்டகம் ஓடி விட்டது. அதனை நான் தேடுவதற்காக செல்கின்றேன் என்று அன்னார் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தாங்கள் தங்களுக்குப் பிறகு வரக்கூடிய கலீஃபாக்களுக்கு எப்படிப்பட்ட வழிப்பாதையை அமைத்து விட்டீர்கள் என்றால் அதன் வழி நடப்பது எளிதல்ல என்று நான் கூறினேன். அபுல் ஹஸனே! என்னை குற்றம் சாட்டாதீர் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நபித்துவத்துடன் அனுப்பிய இறைவனின் மீது ஆணையாக! ஓர் ஆட்டுக் குட்டி பராத் நதியின் கரையில் தொலைந்து விட்டாலும் கியாமத் நாளன்று உமரிடம் அது பற்றி விசாரிக்கப்படும் என்று கூறினார்கள்.

(ஷா வலியுல்லாஹ் சாஹிப் தெஹ்லவி அவர்கள் எழுதிய இஸாலத்துல் குலஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா என்ற நூல் தொகுதி 3 பக்கம் 286, 287 – கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு முஸ்லிம் தனது கழுத்தை தொங்கவிட்டவாறு (கீழே குனிந்தபடி) சென்று கொண்டிருந்தார். அதாவது ஒரு முஸ்லிம் இருந்தார். அவர் கழுத்தை குனிந்து கொண்டு சென்று கொண்டிருந்தார். அவருக்கு ஏதாவது துக்கம் ஏற்பட்டிருக்கலாம். ஏதாவது துன்பம் ஏற்பட்டிருக்கலாம். அதன் காரணமாக அவர் நிம்மதி இழந்திருக்கலாம். அவர் தனது கழுத்தை குனிந்து கொண்டு சென்று கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை ஒரு குத்து குத்தினார்கள். இது இஸ்லாத்தின் வெற்றிகளுக்குரிய காலமாகும். நீரோ கழுத்தை குனிந்து கொண்டு செல்கின்றீரா? என்று கேட்டார்கள். அதாவது இந்த காலத்தில் இஸ்லாத்திற்கு வெற்றிகள் கிடைத்து வருகின்றன. நீர் இவ்வாறு செல்கின்றீரா? உமக்கு ஏதாவது சிறிது துன்பம் ஏற்பட்டிருந்தாலும் கூட அதன் காரணமாக நீர் உமது தலையை தாழ்த்திக் கொள்வீரா? கழுத்தை தாழ்த்திக் கொண்டு நடந்து கொண்டிருக்கின்றீரா? இது என்ன வழிமுறை? இறைவன் தற்போது இஸ்லாத்திற்கு ஆட்சியை வழங்கி இருக்கின்றான். உலகம் என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும். இஸ்லாம் வெற்றி பெறும் என்று நீர் நம்பிக்கை வைத்துள்ளீர். இஸ்லாம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உமக்கு இருக்குமென்றால் பிறகு ஏன் அழுகின்றீர்? என்று கூறினார்கள்.

(காதியான் ஸே ஹமாரி ஹிஜ்ரத் ஏக் ஆஸ்மானி தக்தீர் தி, அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 379)

பின்னர் சின்னச் சின்ன விஷயங்களில் அழுவதற்கு அவசியமில்லை. ஓரிடத்திலிருந்து முஸ்லிம்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அழுவதற்கும், சங்கடப்படுவதற்கும் அவசியம் இல்லை. இந்த விஷயத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காதியானிலிருந்து

ஹிஜ்ரத் செய்த பிறகு இது பற்றி கூறியிருந்தார்கள். ஒரு நம்பிக்கையாளர் தான் என்ன இழந்தார்? என்று பார்க்கக்கூடாது. ஒருவர் ஒன்றை இழந்திருந்தாலும் கூட சிறிதளவு பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும் கூட எதனை இழந்தோம் என்று பார்க்கக்கூடாது. மாறாக, யாருக்காக இழந்தோம் என்று பார்க்க வேண்டும். இறைவனுக்காகவும், இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காகவும் ஏதேனும் ஒரு பொருள் வீணாகி இருந்தால் கையிலிருந்து நழுவி இருந்தால் பின்னர் இறைவன் அதற்கு சிறந்த நற்கூலியை வழங்குவான். தற்காலிக பாதிப்புகளால் சங்கடத்திற்குள்ளாக வேண்டிய அவசியமில்லை.

இதேபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு பிரபலமான சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். அதன் விளைவைக் குறித்து அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு துன்பத்தை எதிர்கொள்ள வேண்டியது இருந்தாலும் கூட அன்னார் அந்த துன்பத்தை எந்த வகையிலும் பொருட்படுத்தவில்லை. இஸ்லாம் உலகில் நிலைநாட்ட விரும்புகின்ற சமத்துவத்தை அன்னார் நிலைநாட்டினார்கள்.

அந்த சம்பவம் இதுவாகும்: ஜபலா இப்னி அய்ஹம் என்பவர் ஒரு பெரிய கிறிஸ்துவ கோத்திரத்தின் தலைவராக இருந்தார். சிரியாவின் மீது முஸ்லிம்கள் தாக்குதலை தொடங்கியபோது அவர் தமது கோத்திரத்துடன் முஸ்லிமாகி விட்டார். ஹஜ் செய்வதற்கு சென்றார். ஹஜ்ஜில் ஒரு பெரிய கூட்டம் ஓரிடத்தில் இருந்தது. தற்செயலாக ஒரு முஸ்லிம் அவரது கால்களை மிதித்து விட்டார். சில அறிவிப்புகளில் இவ்வாறும் வருகின்றது. அவரது பாதம் இவரது ஆடையின் மீது பட்டு விட்டது. அவர் தம்மை ஒரு பெரும் அரசராக கருதியிருந்தார். எனது சமுதாயத்துடன் ஆயிரம் நபர்கள் எனக்கு கட்டுப்பட்டு இருக்கின்றார்கள் என்று அவர் எண்ணி இருந்தார். இன்னும் கூறப்போனால் சில அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. அவரது போர் வீரர்களின் எண்ணிக்கை மட்டுமே 8000 ஆக இருந்தது.

எவ்வாறிருப்பினும் ஓர் ஏழை எளிய முஸ்லிமின் பாதம் அவர் மீது பட்டு விட்டது. எனவே அவர் ஆவேசமடைந்து அவரை ஓங்கி அடித்து விட்டார். மேலும் நீ என்னை இழிவுபடுத்துகின்றாயா? என்றும் கூறினார். நான் யார் என்று உமக்குத் தெரியுமா? நீர் மரியாதையுடன் என்னிடமிருந்து விலகி இருந்திருக்க வேண்டும். நீ அவமரியாதையாக எனது பாதத்தின் மீது உமது கால்களை வைத்து விட்டாய் என்று கூறினார். அந்த முஸ்லிம் அடியை வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தார். ஆனால் மற்றொரு முஸ்லிம் இவ்வாறு கூறினார்: எந்த மார்க்கத்தில் நீ இணைந்திருக்கின்றாயோ அது இஸ்லாம் ஆகும் என்பதும், இஸ்லாத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எந்த வித்தியாசமும் கிடையாது என்பதும் உமக்குத் தெரியாதா? என்று கேட்டார். குறிப்பாக இந்த வீட்டில் அதாவது நீர் வலம் வந்து கொண்டிருக்கின்ற கானா கஃபா என்ற இந்த வீட்டில் பணக்காரர், ஏழை என்ற எந்த வித்தியாசமும் பார்க்கப்படுவதில்லை என்பது உமக்குத் தெரியாதா? என்று கேட்டார். அதற்கு அவர் நான் இதனை பொருட்படுத்துவதில்லை என்று கூறினார். அதற்கு அந்த முஸ்லிம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் உம்மைக் குறித்து புகார் செய்யப்பட்டால் அவர் இந்த முஸ்லிம் சார்பாக உம்மை பழிவாங்குவார் என்று கூறினார்.

ஜபலா இப்னி அய்ஹம் இதனைக் கேட்டபோது முற்றிலும் பதறிப் போனார். ஜபலா இப்னி அய்ஹம் முகத்தில் அறையக்கூடிய ஒரு நபர் இருக்கின்றாரா? என்று கேட்டார். வேறு யாரும் இருக்கின்றாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்படிப்பட்டவர் தான் என்று அந்த நபர் கூறினார். இதைக்கேட்டு விட்டு அவர் வேகமாக தவாஃப் செய்தார். பின்னர் நேரடியாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபைக்கு சென்றார். ஒரு பெரிய மனிதர் ஒரு சிறிய நபரை ஓங்கி அறைந்து விடடால் தாங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த பெரிய நபரின் முகத்தில் அந்த சிறிய நபரைக் கொண்டு அடிக்கச் செய்வேன் என்று அன்னார் கூறினார்கள். தாங்கள் எனது கருத்தை புரியவில்லை என்று ஜபலா கூறினார்.

எனது கருத்து என்னவென்றால், ஒரு மாபெரும் மனிதர் ஒருவரை அடித்து விட்டால் பின்னர் தாங்கள் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார். இஸ்லாத்தில் உயர்ந்தவர்; தாழ்ந்தவர் என்ற எந்த வித்தியாசமும் இல்லை என்று அன்னார் கூறினார்கள். பின்னர் ஜபலா! அந்தத் தவறை நீர் செய்திருக்கவில்லையே? என்று கேட்டார்கள். அதற்கு அவர் பொய் கூறி விட்டார். நான் யாரையும் அடிக்கவில்லை என்று கூறினார். நான் ஒரு விஷயத்தை மட்டுமே கேட்டேன் என்று கூறினார். ஆனால் அப்போதே அந்த சபையிலிருந்து எழுந்தார். மேலும் தனது தோழர்களை அழைத்துக் கொண்டு நாட்டிலிருந்து ஓடி விட்டார். மேலும் தனது சமுதாயத்துடன் முர்தத் ஆகிவிட்டார். மேலும் முஸ்லிம்களுக்கெதிராக ரோமானியர்களின் போரில் அவர் கலந்து கொண்டிருந்தார். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை பொருட்படுத்தவில்லை.

(ஸேரே ரூஹானி, அன்வாருல் உலூம் தொகுதி 16 பக்கம் 42, 43)

இஸ்லாமிய அரசாங்கம் நிலைநாட்டிய சமத்துவம் இதுதான். இன்றைய இஸ்லாமிய அரசாங்கங்களுக்கும் இது பாடமாகும்.

இந்த நற்குறிப்பு இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் தொடரும். தற்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைப்பேன். அவர்களில் முதலாவது நற்குறிப்பு, ஜெர்மனியின் Waldshut ஜமாஅத்தின் தலைவராக இருந்த அப்துல் வஹீத் வடாய்ச் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் சுவிட்சர்லாந்தின் முன்னாள் குத்தாமுல் அஹ்மதிய்யா தலைவராகவும், முன்னாள் தேசிய தர்பிய்யத் செயலராகவும் இருந்தார்கள். மே மாதம் 12 ஆம் தேதி எவரெஸ்ட் சிகரத்தில் வெற்றியுடன் ஏறி அஹ்மதிய்யத்தின் கொடியை பறக்க விட்டு விட்டு கீழே இறங்கியபோது உடல்நலம் பாதிக்கப்பட்டதால் 41 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் தனக்குப் பிறகு மனைவி மட்டுமின்றி மூன்று மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். பெற்றோரும் உள்ளனர். ஒரு சகோதரரும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

சுவிச்சர்லாந்து ஜமாஅத்தின் அமீர் சாஹிப் தாரிக் தாரின்சதர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அப்துல் வஹீத் வடாய்ச் சாஹிப் தொடக்கம் முதல் தனது மரணம் வரை எப்பொழுதும் ஜமாஅத்தின் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார்கள். ஜமாஅத் உறுப்பினர் என்ற முறையிலும், பொறுப்பாளர் என்ற முறையிலும் மர்ஹூம் ஒரு முன்னுதாரணமான அஹ்மதியாக இருந்தார்கள். அன்னார் நன்றியுணர்வுமிக்க அஹ்மதியாக இருந்தார்கள். அப்துல் வஹீத் வடாய்ச் சாஹிப் மிகவும் பணிவுடன் எப்போதும் ஜமாஅத் தொண்டுகளை ஆற்றி வந்தார்கள். அவர்களின் இயல்பில் ஆணவத்திற்கு எந்த இடமும் இல்லாமல் இருந்தது. அவர்கள் மனிதத் தொண்டு ஆற்ற எப்போதும் அறிவுரை செய்து வந்தார்கள்.

இன்னும் கூறப்போனால், சுயம் அன்னார் தனது முன்னுதாரணத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். IAAAE யின் பல்வேறு Project-கள் தொடர்பாக ஆப்பிரிக்காவிற்கும் சென்றார்கள். அங்கு அன்னாருடைய மனிதத் தொண்டுகளைப் பார்த்து பல்வேறு இளைஞர்கள் அன்னாரின் முன்னுதாரணத்தின் வழி நடந்து ஆப்ரிக்கா சென்றார்கள். அன்னார் சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக நியமனம் செய்யப்பட்டபோது ஐரோப்பாவின் பௌதீக விருப்பங்கள், எண்ணங்கள் மற்றும் ஆர்வத்திலிருந்தும் இளைஞர்களை பாதுகாக்கின்ற கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கான புத்தம்புது வழிகளை தேடிக் கொண்டிருந்தார்கள். பொருள் தியாகத்திலும் அன்னார் முன்னுதாரணமாக இருந்தார்கள்.

அமீர் சாஹிப் அவர்களும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அன்னாரின் மகனான அன்பிற்குரிய தல்ஹா வடாய்ச் தற்போது ஜெர்மனியின் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று வருகின்றார். மர்ஹூம் அவருக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கியுள்ளார். அதன் விளைவாகவே அன்னாரின் மகன் ஜாமிஆவில் பயின்று வருகின்றார். சுருக்கமாக கூறுவதென்றால், மர்ஹூம் அப்துல் வஹீத் வடாய்ச் சாஹிப் அவர்கள் அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடிய ஒரு முன்னுதாரணமான அஹ்மதியாக இருந்தார்கள்.

ஜமாஅத்தைச் சாராத நபர்களும் அன்னாரின் மரணத்தில் இரங்கலை வெளிப்படுத்தியுள்ளனர். Mr. Stefan Lorch எழுதுகின்றார்கள்: வஹீத் வடாய்ச் சாஹிப் அவர்கள் பல ஆண்டுகள் Swisscom கம்பெனியில் பணி செய்தார்கள். அது சுவிர்சர்லாந்தில் மிகப்பெரிய தொலைத் தொடர்பு கம்பெனியாகும். சுமார் ஓராண்டாக அன்னாருடன் அன்னாருடைய குழுவில் நான் பணி செய்கின்றேன். நான் அன்னாருடைய திறமையின் காரணமாக மட்டும் அன்னாருக்கு கண்ணியம் அளித்து வரவில்லை. மாறாக, அன்னாருடைய செயல்முறையின் காரணமாகவும் அன்னாருக்கு மதிப்பளித்து வந்தேன். வஹீத் வடாய்ச் சாஹிப் எப்போதும் நல்லொழுக்கத்துடன் நடந்து வந்தார்கள். அன்னார் பிறருக்கு உதவி செய்யக்கூடியவராகவும்,நம்பிக்கைக்குரியவராகவும், நேர்மையாளராகவும் திகழ்ந்தார்கள். அன்னாரிடம் பணியை தவிர்த்து (மற்ற விஷயங்களையும்) பேசுவதற்கும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

முரப்பி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் மிகவும் உயர்தரமான பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது அன்பு இருந்தது. தொடர்ந்து ஜுமுஆ தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வந்து தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். ஏனைய தொழுகைகளையும் பள்ளிவாசலில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள்.

தேசிய பொருளாளர் ரிஸ்வான் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அன்னார் Microsoft Company-ல் சுவிர்சர்லாந்து கிளையில் மென்பொருள் பொறியாளராக வேலை செய்து வந்தார்கள். ஒரு முறை அன்னார் என்னிடத்தில் கூறினார்கள்: Microsoft நிறுவனம் சுவிர்சர்லாந்தில் தனது கிளையை மூடி விட்டு Sillicon Valley க்கு செல்கின்றார்கள். அவர்கள் தம்முடன் வருவதற்கு எனக்கு Offer வழங்கினார்கள். அனைத்து வசதி வாய்ப்புகளும் தரப்படும். சம்பளமும் கூட்டப்படும். சுவிர்சர்லாந்திலிருந்து தங்களுடைய அனைத்துப் பொருட்களையும் நாங்கள் அங்கு இடம் மாற்றி விடுவோம் என்று Offer வழங்கினர். ஆனால் நான் அதை நிராகரித்து விட்டேன். ஏனென்றால் என்னிடம் இங்கு ஜமாஅத் பொறுப்புகள் உள்ளன. நான் இங்கு அதை மறுத்து விட்டு அங்கு சென்று விடுவதை விரும்பவில்லை என்றும் கூறினார்கள்.

பின்னர் சில நாட்களுக்குப் பிறகு அன்னார் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்த கிளையை சுவிர்சர்லாந்தின் பெரிய கம்பெனி Swisscom விலைக்கு வாங்கி விட்டது. அவர்கள் என்னை அங்கு கொண்டு செல்வதாக கூறியிருந்தனர். ஆனால் அல்லாஹ் இங்கு அந்த ஏற்பாட்டைச் செய்து விட்டான். இங்கு அந்த ஏற்பாட்டை மட்டும் செய்யவில்லை. மாறாக, என்னுடைய சம்பளத்தை எனது Boss-ஐ விடவும் அதிகரித்து விட்டார்கள். இது அல்லாஹ்வின் அருளாகும்.

தேசிய வெளியுறவுச் செயலர் ஸாஹித் சாஹிப் அவர்கள் எழுதகிறார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

நான் அன்னாரை 26 ஆண்டுகளாக அறிந்துள்ளேன். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் அன்னாருடன் தொண்டாற்றும் சந்தர்ப்பம் கிடைத்து வந்தது. மிகவும் கண்ணியமிக்க நபராகவும், நோன்பு மற்றும் தொழுகைகளை பேணக்கூடியவராகவும், துஆ செய்யக்கூடியவராகவும், மிகவும் கடின உழைப்பாளி ஆகவும், கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவராகவும், கட்டுப்பட்டு நடப்பவராகவும், பரிவுமிக்க நண்பராகவும், எல்லாருடனும் நேசம் கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். இளமைப் பருவம் முதலே ஏனைய இளைஞர்களிடமிருந்து தனித்த பண்பிற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். மர்ஹூமை ஒருபோதும் கோபப்பட்டு நான் பார்த்ததில்லை. அதேபோன்று அன்னாருடைய முகத்தில் ஒருபோதும் அதன் தாக்கத்தை நான் கண்டதில்லை. அல்லது அன்னாருடைய பேச்சிலும் உணர்ந்ததில்லை. ஒருபோதும் உரத்த குரலிலோ அல்லது கடினமாகவோ அன்னார் பேசியதை நான் கண்டதில்லை. எங்களிடம் தவறுகளும் வெளிப்பட்டு வந்தன. ஆனால் எப்போதும் தனிமையில் மென்மையுடன் எங்களுக்கு புரிய வைத்து வந்தார்கள். பெரியவர்களிடமும், சிறியவர்களிடமும் எப்போதும் நற்பண்புகளுடன் சிரித்த முகத்துடன் பழகி வந்தார்கள். சிறிய அளவிலான புன்சிரிப்பு முகத்தில் இருந்து வந்தது. உயிரையும், செல்வத்தையும், நேரத்தையும், கண்ணியத்தையும் தியாகம் செய்வதற்கு தயாராக இருந்த உயிருள்ள முன்னுதாரணம் கொண்ட நபராக இருந்தார்கள்.

சுவிர்சர்லாந்தில் 20ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு கல்வி மற்றும் எதிர்காலம் தொடர்பாக மர்ஹூம் வழிகாட்டல் மட்டும் வழங்கவில்லை. மாறாக, பலருக்கும் வேலை கிடைப்பதற்கு உதவியும் செய்துள்ளார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா அமைப்பின் கீழ் அன்னார் அஹ்மதிய்யா ஹைகிங் கிளப் ஒன்றையும் நிறுவினார்கள். பல இளைஞர்களுக்கும் ஹைகிங்கைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார்கள். அசாதாரண மன உறுதி கொண்ட மனிதராக இருந்தார்கள். நான் ஒரு முறை அன்னாரிடம், மலையேற்றம் செய்யும்போது உங்களுக்கு பயமாக இல்லையா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், பயம் ஏற்படுகிறது. எனது குடும்பத்தினரும் கூட அதை விரும்பவில்லை. ஆனால் நான் இதற்கான தீர்வை இவ்வாறு ஏற்படுத்தினேன். அதாவது காலத்தின் கலீஃபாவை சந்தித்தேன். அன்னார் என்னை சந்தித்தார்கள். பின்னர் நான் சிந்தித்தேன். ஹுஸூர் அவர்களுக்கு முன்னால் இந்த விஷயத்தை முன் வைக்க வேண்டும். அன்னார் அனுமதி வழங்கி விட்டால் (நான் அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டால்) அதை தொடர வேண்டும் என்று எண்ணினேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் 7 கண்டங்களின் சிகரங்களை அடைந்து அவற்றில் அஹ்மதிய்யத்தின் கொடியை பறக்க விட வேண்டும் என்று நான் எண்ணினேன். நான் (ஹுஸூர்) அன்னாரை தடை செய்து விடுவேனோ என்ற அச்சம் அன்னாருக்கு இருந்ததாக அன்னார் கூறினார்கள். ஆனால் செல்ல முடியும் என்றால் பின்னர் கொடியை நட்டு விடுங்கள் என்று நான் கூறினேன். எனவே இனி நான் இன்ஷா அல்லாஹ் அவ்வாறே செய்வேன் என்று அவர் கூறினார். எனவே பின்னர் ஒருபோதும் இந்த இளைஞர் திரும்பிப் பார்க்கவில்லை. அந்த மகத்துவமிக்க நோக்கத்தை அடைவதற்காக கடுமையாக உழைத்தார். ஒன்றிற்குப் பிறகு மற்றொரு சிகரத்தை தொட்டுக் கொண்டே சென்றார். உலகத்தின் மிகப்பெரிய சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் அஹ்மதிய்யத்தின் கொடியை பறக்க விடும் கண்ணியமும் மர்ஹூமிற்கு கிடைத்திருந்தது.

எழுதுகின்றவர் இவ்வாறு எழுதுகின்றார்: அன்னாரின் மரணம் ஷஹாதத் என்று அழைக்கப்பட முடியுமா? முடியாதா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் எனது சாட்சியத்தால் இவ்வாறு கூற முடியும். நல்ல மக்களிடம் காணப்படுகின்ற மற்றும் ஷஹாதத்தை தேடுகின்ற நல்லடியார்களிடம் இருக்கும் ஈமானிய உணர்வு மர்ஹூமிடத்தில் இருந்தது. ஆனால் என்னைப் பொறுத்தவரை நிச்சயமாக ஒரு நல்ல நோக்கத்துடனும், உணர்வுடனும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் மற்றும் இறைவனின் ஏகத்துவ தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்துள்ளார்கள். மேலும் அதில் வெற்றியும் கண்டார்கள். அவர் தனது நோக்கத்தின் பயணத்தில் அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராகி விட்டார். அவர் நிச்சயமாக ஷஹாதத்தின் அந்தஸ்தை அடைந்திருப்பார். அல்லாஹ் அவருக்கு ஷஹாதத்தின் அந்தஸ்தை வழங்குவானாக. மேலும் அல்லாஹ் அன்னாரை ஷுஹதாக்களில் கணக்கிடுவானாக என்று நாம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

துஆ செய்கின்றோம்.

அன்னாரது தந்தையான மதிப்பிற்குரிய காதிம் ஹுஸைன் வடாய்ச் சாஹிப் கூறினார்கள்: எங்களது இந்த மகன் முன்னேறிக் கொண்டே செல்கின்றார் என்பது எங்களுக்கு தென்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு மலைக்குப் பிறகு மற்றொரு மலையின் மீது ஏறிக் கொண்டிருந்தார். அவர் ஒருபோதும் பின்னால் திரும்பி பார்க்கவில்லை. நீங்கள் ஏன் அவரை தடுப்பதில்லை? என்று எனது நண்பர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தனர். இது மிகவும் ஆபத்தான விருப்பமாகும் என்றும் கூறினர். நான் தடுத்தாலும் கூட அவர் நிற்க மாட்டார். ஏனென்றால் அவரிடத்தில் ஓர் உத்வேகம் உள்ளது. நான் அஹ்மதிய்யத்தின் கொடியை உலகின் எல்லா உயரமான இடத்திலும் பறக்க விட வேண்டும். மேலும் அல்லாஹ்வின் ஏகத்துவ தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற துடிப்பு அவரிடத்தில் இருக்கிறது என்று நான் பதிலளித்தேன்.

ஒரு நண்பர் எழுதுகின்றார்: நான் ஒரு முறை சத்ர் சாஹிப் அவர்களிடம் நீங்கள் மலைகள் மீது ஏறுகின்றபோது உங்களை Motivate செய்து கொள்வதற்காக கைபேசியில் தாங்கள் எதனைக் கேட்பீர்கள் என்று கேட்டேன். அதற்கு அன்னார், நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை பதிவிறக்கம் செய்து வைத்துள்ளேன். பயணத்தில் அதனை நான் கேட்கின்றேன் என்று சத்ர் சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

அதேபோன்று அவர் கூறுகின்றார்: நான் சத்ர் சாஹிப் அவர்களிடம் ஒரு முறை இவ்வாறு கேட்டேன்: இவ்வளவு பெரிய உயரத்திலும், குளிரிலும் நீங்கள் எவ்வாறு இறைவணக்கம் செய்கின்றீர்கள்? என்றேன். அதற்கு அன்னார், முரப்பி சாஹிப்! எனக்கு மலைகளில் இறைவணக்கம் செய்வதில் மிகவும் இன்பம் ஏற்படுகின்றது. அல்லாஹ்வின் நபிமார்களும் மலைகளில் தன்னந்தனியாக உலகத்தின் கூச்சல்களிலிருந்து விலகிச் சென்று இறைவணக்கம் செய்து வந்துள்ளனர் என்ற எண்ணம் அப்போது எனது உள்ளத்தில் வருகின்றது என்று அன்னார் கூறினார்.

அப்துல் வஹீத் வடாய்ச் சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள்: ஒரு பயணத்தின் சம்பவத்தை கூறினார். ஒரு முறை Denali மலையில் அது நார்த் அலாஸ்காவில் உள்ளது. உலகத்திலேயே மிகவும் அதிகமான குளிரான மலையாகும். அதில் ஏறும்போது அன்னாரின் ஷஹாதத் விரல் உறைந்து விட்டது. அது ஃபிரீஸ் ஆகிவிட்டது. மேலும் காயப்பட்டது. அது முற்றிலும் உறைந்து விட்டது. அது உடலின் ஒரு அங்கமாகவே இருக்கவில்லை. அன்னார் மருத்துவரிடம் அந்த காயத்தை காட்டினார்கள். நாம் இதனை உடனடியாக வெட்ட வேண்டும். இது செயலிழந்து விட்டது என்று டாக்டர் கூறினார். அதற்கு இது ஷஹாதத்தின் விரலாகும். இதனுடன் தொழுகையில் நாம் அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கான சாட்சியத்தை வழங்குகின்றோம். எனவே நான் இந்த விரலை ஒருபோதும் வெட்ட விட மாட்டேன் என்று சத்ர் சாஹிப் அவர்கள் பதிலளித்தார்கள். அதன் பிறகு அல்லாஹ் அருள் செய்தான். துஆவின் மூலமாக அந்த விரல் முழுமையாக சரியாகி விட்டது.

அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அன்னாரிடமிருந்த சிறப்புகளை மக்கள் எடுத்துக் கூறியுள்ளனர். நானும் அவரிடத்தில் கண்டுள்ளேன். அவர் இதை விட அதிகமாக அந்த சிறப்புகளில் முன்னேறி இருந்தார். கிலாஃபத்தின் ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படியக்கூடியவராக இருந்தார். வெறும் பேசுபவராக மட்டும் இருக்கவில்லை. மாறாக, நன்றியுணர்வு மற்றும் கலப்பற்றதன்மையில் முன்னேறி இருந்தார். அதில் முன்னேறிக் கொண்டு செல்வதற்கு முயற்சியும் செய்து வந்தார். எவர்கள் செல்வதால் வெற்றிடம் உருவாகி விடுகின்றதோ அத்தகைய நபராக அவர் இருந்தார். எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று அல்லாஹ்வின் மார்க்கம் மற்றும் அவனது ஏகத்துவத்தின் கொடியை எல்லா உயரமான இடங்களிலும் நாட்டுவது அன்னாரின் நோக்கமாக இருந்தது. அதில் அன்னார் வெற்றியும் பெற்றார். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த குறிப்பு மதிப்பிற்குரிய அமத்துன் நூர் சாஹிபா அவர்களுடையதாகும். மர்ஹூமா டாக்டர் அப்துல் மலிக் ஷமீம் சாஹிப் அவர்களுடைய துணைவியாராக இருந்தார்கள். மேலும் சாஹிப்ஸாதி அமத்துர் ரஷீத் பேகம் மற்றும் மியான் அப்துர் ரஹீம் சாஹிப் அவர்களது மகளாக இருந்தார்கள். ஜூன் 15 ஆம் தேதி வாஷிங்டனில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

இறைவனின் அருளால் மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கொள்ளுப் பேத்தியாகவும், அதேபோன்று ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகள்வழி கொள்ளுப் பேத்தியாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸய்யிதா அமத்துல் ஹய் சாஹிபா அவர்களின் மகள்வழிப் பேத்தியாகவும் இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான பீகாரைச் சேர்ந்த ஹஸ்ரத் புரோஃபஸர் அலி அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன்வழிப் பேத்தியாகவும் இருந்தார்கள்.

நான் கூறியது போன்று டாக்டர் அப்துல் மலிக் ஷமீம் சாஹிப் மர்ஹூமாவின் கணவராக இருந்தார்கள். அவர் (மர்ஹூமாவின் கணவர்) மவ்லவி அப்துல் பாகி சாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு இரண்டு மகள்களை வழங்கி இருந்தான். அன்னாரின் நிக்காஹ் குத்பாவில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நிக்காஹ்வின் சந்தர்ப்பத்தில் ஓத வேண்டிய திருக்குர்ஆன் வசனங்களை ஒதிய பிறகு இவ்வாறு கூறினார்கள்:

நிக்காஹ்வின் சந்தர்ப்பத்தில் ஓதப்படும் இந்த வசனங்களில் இறைவன், செயல் சீர்திருத்தத்திற்கு நேர்மையான கூற்று மிகவும் அவசியமாகும் என்ற விஷயத்தையும் கூறியுள்ளான். பெரும்பாலான துன்பங்களும், சிக்கல்களும் தீய செயல்களின் விளைவாகவே உருவாகின்றன. பரஸ்பரம் தொடர்புகளை பொறுத்தவரை நேர்மையான கூற்றை கைகொள்ளாததே தீய செயல்களின் விளைவாக அமைகிறது. நேரான, தூய, நம்பிக்கையாளருக்குரிய விஷயங்கள் பேசப்பட்டால் எந்த தவறான புரிதலுக்கும் வாய்ப்பு இருப்பதில்லை. எந்தவொரு தீய மற்றும் தவறான பிரச்சனைகளுக்கான அபாயமும் எஞ்சியிருப்பதில்லை.

அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்செயல்கள் புரிவதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும் நம் அனைவரின் செயல்களையும் சீர்திருத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. மேலும் நமக்கு நேர்மையான கூற்றை பேசக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்துவானாக. இந்த விஷயம் நமது தனித்தன்மையாக ஆகிவிட வேண்டும்.

பின்னர் அன்னாருடன் மேலும் 6 நிக்காஹ் நடைபெற்றது. அவர்கள் தொடர்பாக அன்னார் கூறினார்கள்:

ஒரு நிக்காஹ் உறவின் அடிப்படையிலும், அன்பின் தொடர்பின் விளைவாகவும் எனது சொந்த பிள்ளையின் நிக்காஹை போன்றது ஆகும். இந்தப் பிள்ளை மியான் அப்துர் ரஹீம் சாஹிப் மற்றும் எனது சிறிய சகோதரியான அமத்துர் ரஷீத் பேகம் சாஹிபா அவர்களின் மகளான அமத்துன் நூர் சாஹிபா ஆவார். அன்னாரின் திருமணம் டாக்டர் அப்துல் மாலிக் ஷமீம் சாஹிப் அவர்களுடன் நடைபெறுகிறது. அவர் மவ்லவி அப்துல் பாகி சாஹிப் அவர்களின் மகனாவார்.

மேலும் அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்விடம் நாம் துஆ செய்வோம். இந்த திருமணத்தையும், எஞ்சிய ஐந்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

திருமணங்களையும் அல்லாஹ் தனது கருணையினால் ஏராளமான மகிழ்ச்சிக்கு காரணியாக ஆக்குவானாக. ஒவ்வொரு தம்பதிக்கும், ஜமாஅத்திற்கும் மகிழ்ச்சிக்கு காரணியாக ஆக்குவானாக. இஸ்லாத்தின் நன்மையே அசல் நோக்கமாக இருக்க வேண்டும். ஒரு நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு இஸ்லாத்தின் வெற்றியின் வழியில் இறுதியில் அஹ்மதிய்யத் மாபெரும் வெற்றியை பெற வேண்டியதுள்ளது. எனவே ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை சரியான தர்பிய்யத் பெறுவதும், சரியான எண்ணங்களை கொண்டிருப்பதும் அவசியமாகும். அல்லாஹ்வின் கருணை இல்லையென்றால் மனிதனின் அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்று வீணாகி விடும். மேலும் எந்த விளைவையும் தராது. எனவே நாம் துஆ செய்வோம். இந்த திருமண உறவுகள் மூலம் அல்லது இனி ஏற்பட இருக்கின்ற உறவுகள் மூலம் அல்லாஹ்வின் அருளால் இஸ்லாத்தின் வலிமையும், இஸ்லாத்தின் உறுதிப்பாட்டிற்கான ஏற்பாடும் உருவாகட்டுமாக.

(குத்பாத்தே நாஸிர் தொகுதி 10 பக்கம் 478, 479)

சாஹிப்ஸாதி அமத்துன் நூர் சாஹிபா அவர்களுக்கு ஜமாஅத்தின் தொண்டுகள் ஆற்றுவதற்கும் நற்பேறு கிடைத்துள்ளது. அமெரிக்காவின் தேசிய தர்பிய்யத் செயலராக இருந்துள்ளார்கள். அமெரிக்காவின் தேசிய நாயிப் சத்ர் லஜ்னாவாக இருந்துள்ளார்கள். வாஷிங்டனின் உள்ளூர் சதராகவும் இருந்துள்ளார்கள். பல்வேறு கமிட்டியின் உறுப்பினராக இருந்துள்ளார்கள்.

அன்னாரின் மூத்த மகள் அமத்துல் முஜீப் சாஹிபா அவர்கள் எழுதுகின்றார்கள்:

எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். மக்களிடம் எல்லையற்ற அனுதாபம் கொண்டிருந்தார்கள். ஒருவருக்கு உதவி செய்ய முடிந்தால் அசாதாரண முறையில் அம்மா உதவி செய்து வந்தார்கள். தனது இறைவணக்கத்தை மிக அதிகமாக பேணி வந்தார்கள். ஐவேளை தொழுகை மட்டுமல்லாமல் ஏனைய விஷயங்களையும் பேணி வந்தார்கள். நான் பார்த்துள்ளேன். தினமும் சில முறை இரவில் கண் விழிப்பேன். அப்போது அன்னார் தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருப்பதை நான் பார்த்துள்ளேன். அமத்துன் நூர் சாஹிபா அவர்களின் கணவர் நீண்ட காலத்திற்கு முன்பு ஒரு விபத்தில் மரணமடைந்திருந்தார்கள்.

அவர்களது மகள் கூறுகின்றார்கள்: எனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு 20 ஆண்டுகளாக விதவையின் நிலையில் வாழ்க்கையை கழித்தார்கள். இந்நிலையில் அன்னார் அல்லாஹ்வின் மீது மிகவும் உயர்தரமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அன்னாரிடம் நன்றியுணர்வின் அம்சம் மிகவும் தெளிவாக காணப்பட்டது. அல்லாஹ்வின் கருணைகளும், உதவிகளும் நம்மீது அதிகமாக உள்ளன என்று அன்னார் கூறி வந்தார்கள்.

இந்த விஷயத்தை அன்னாரிடமிருந்து நான் கேட்டு வந்துள்ளேன். நீங்கள் நன்றி செலுத்தினால் நான் அதிகமாக வழங்குவேன் என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். எனவே எப்போதும் நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியாராக திகழுங்கள். உள்ளத்தை திறந்ததாகவும், பரந்துபட்டதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். விருந்து உபசரிப்பு செய்யுங்கள். மக்களுக்கு உண்மையான அனுதாபத்தை வெளிப்படுத்துங்கள் என்று (எங்களுக்கு) கூறி வந்தார்கள். உறவுகளை பேணுகின்ற சிறப்பு அன்னாரிடம் மிக அதிகமாக காணப்பட்டது.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: உங்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளும் ஒவ்வொருவருடனும் நீங்கள் கருணையுடன் நடந்து கொள்வது (உண்மையில்) கருணையுடன் நடந்து கொள்வதல்ல என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வரிகளை நான் எனது தாயாரிடமிருந்து எண்ணற்ற முறை செவிமடுத்துள்ளேன். உங்களிடம் தொடர்பை துண்டித்துக் கொண்டவர்களிடமும் நீங்கள் கருணையுடன் நடந்து கொள்வது தான் (உண்மையில்) கருணையுடன் நடந்து கொள்வது ஆகும். எங்களது ஒவ்வொரு உறவிலும், தொடர்பிலும் நான் எனது தாயிடத்தில் இந்த சிறப்பை கண்டுள்ளேன். அன்னார் ஒவ்வொருவரிடமும் சிறப்புகளை தேடிக் கொண்டிருப்பார்கள். இரத்த உறவுகள் மற்றும் ஜமாஅத்தின் மக்களையும் அண்டை அயலாரையும் அன்னார் கருத்தில் கொண்டு வந்தார்கள். ஒரு புதிய விருந்தினர் பள்ளிவாசலுக்கு வந்தால் அவருடன் அமர்ந்து பேசுவார்கள். அன்னார் அன்பு கொள்ளக்கூடியவராக இருந்தார்கள் என்று எண்ணற்ற மக்கள் கூறியுள்ளனர்.

அன்னாரது இரண்டாவது மகள் இவ்வாறு எழுதியுள்ளார்:

ஜமாஅத்தின் மக்களுடன் குறிப்பாக புதிதாக பைஅத் செய்தவர்களுடன் மிக அதிகமான அன்பின் தொடர்பை அன்னார் வைத்திருந்தார்கள். மேலும் மக்களும் அன்னார் மீது மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மனிதருக்கும் உதவி செய்ய விரும்பியிருந்தார்கள். ஒருவரை சந்தித்து அவருக்கு ஏதாவது தேவை இருந்து அதனை நிறைவேற்றாமல் போய்விடக்கூடாது என்ற கவலை அன்னாரிடம் இருந்தது.

அமத்துன் நூர் சாஹிபா அவர்களின் மூத்த சகோதரி அமத்துல் பஷீர் சாஹிபா அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஸிஸ்டர் ஷுகூரா என்ற ஒரு ஆப்ரிக்க பெண்மணி இருந்தார். அவர் ஹஜ்ஜிற்கு சென்றபோது அன்னார் கனவில் இவ்வாறு பார்த்தார். அதாவது நோஷி சாஹிபாவின் வீடு அதாவது அமத்துன் நூர் சாஹிபா அவர்களின் வீடு மக்காவில் உள்ளது. குடும்பத்தில் அன்னார் நோஷி என்று அழைக்கப்பட்டார்கள். சிஸ்டர் ஷுகூரா சாஹிபா அன்னாரிடத்தில் வந்தபோது நீங்கள் என்னிடத்தில் வந்து விட்டீர்கள். நான் தங்களுக்கு தொண்டாற்றுகின்றேன். இதுவே அதன் பொருளாகும் என்று கூறினார்கள்.

அன்னாரின் சகோதரி அமத்துல் பஷீர் சாஹிபா எழுதுகின்றார்கள்: ஆப்ரிக்கன் அமெரிக்கன் ஆகிய சிஸ்டர் ஷுகூரா சாஹிபா 18 ஆண்டுகள் நோஷி சாஹிபா அவர்களிடத்தில் இருந்தார்கள். 8 ஆண்டுகள் வரை முற்றிலும் படுக்கையிலேயே இருந்தார்கள். பார்வையும் சென்று விட்டது. நோஷி அவர்கள் அவரை மிகவும் கருத்தில் கொண்டார்கள். அன்னாருக்கு தொழுகையும் நடத்தி வந்தார்கள். ஏனென்றால் அவர் மறந்து வந்தார். மர்ஹூமா சிஸ்டர் ஷுகூரா சாஹிபா அவர்களை மிகவும் கவனித்து வந்ததை நான் பார்த்துள்ளேன். நான் அமெரிக்கா சென்றபோது அவரை வீல் சேரில் அமர்த்தி என்னை சந்திப்பதற்காக என்னிடத்தில் அழைத்து வந்தார்கள். சிஸ்டர் ஷுகூரா சாஹிபா அவர்களும் அன்னாரின் தொண்டுகளுக்கு மிகவும் நன்றி செலுத்தி வந்தார்கள்.

தப்லீக்கில் ஆர்வம் இருந்தது. ஏதாவதொரு வடிவில் ஜமாஅத்தைப் பற்றி கூறுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். பாகிஸ்தானில் எந்த இடத்திலிருந்து வந்தீர்கள் என்று யாராவது கேட்டு விட்டால் எப்போதும் ரப்வாவின் பெயரைக்கூறி பின்னர் அங்கிருந்து பேச்சை ஆரம்பம் செய்வார்கள். யூத மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது. அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் பெயர் ருகய்யா அஸத் ஆகும். அன்னாருடைய தோழமை எவருக்கு கிடைத்தாலும் அன்னாரின் சிறப்புகளை அவர் பாராட்டுவார். அன்னார் செயல் ரீதியாக தனது வாழ்க்கையை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கேற்ப கழித்தார்கள். அதன் விளைவாக மக்கள் அன்னாரின் மீது மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார்கள். மேலும் அன்னார் மக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்தார்கள்.

சம்பவங்களின் வடிவிலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் வடிவிலும் லஜ்னாக்களின்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

தர்பிய்யத்திற்காக அன்னார் தங்களை வக்ஃப் செய்திருந்தார்கள். அன்னார் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருந்தார்கள். தன்னார்வ முறையில் எப்போதும் தொண்டிற்காக ஆயத்தமாக இருந்தார்கள். உறுதிப்பாடு மற்றும் உறுதியுடன் தமது கஷ்டங்களையும் பிரச்சனைகளையும் எதிர்கொண்டு வந்தார்கள். இந்த அடிப்படையில் அன்னார் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்தார்கள். அன்பு மற்றும் கலப்பற்றதன்மையுடன் தப்லீக் பணிகளை செய்தார்கள். புதிய விருந்தினர்களை கருத்தில் கொள்வதில் அன்னார் முதலிடம் வகித்தார்கள். இளம் பெண்களுக்கும், முதிய பெண்களுக்கும் இருவருக்கும் நல்ல முன்மாதிரியாக இருந்தார்கள்.

ஒரு பெண்மணி எழுதுகின்றார்கள்: எனக்கு வயது அதிகரித்துக் கொண்டு செல்லச்செல்ல எனது உள்ளத்தில் அன்னாரின் மீதான கண்ணியம் அதிகரித்து வருகின்றது. படைப்பினே சேவை செய்ய வேண்டும் என்று நாம் கூறுகின்றோம். ஏழைகளையும், தேவையுடையவர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நாம் கூறுகின்றோம். ஆனால் நோஷி ஆண்டி அவர்கள் உறவினர் அல்லாத நபர்களுக்கும் தொண்டாற்றுவதற்கு ஆண்டாண்டு காலமாக தனது நேரத்தை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அதாவது அன்னார் தனக்கென்று எந்த நேரத்தையும் ஒதுக்கவில்லை. எப்போதும் தொண்டாற்றி வந்தார்கள்.

இதேபோன்று இன்னும் சில அஹ்மதி பெண்கள் குறிப்பாக ஆப்ரிக்கன் அமெரிக்கன் பெண்கள் இவ்வாறு எழுதியுள்ளனர். அதாவது அன்னார் எங்களுடன் பெரும் அன்பிற்குரிய தொடர்பை வைத்திருந்தார்கள். அஹ்மதிய்யத்தின் போதனை பற்றி மிக அதிகமாக எங்களுக்கு கூறியுள்ளார்கள். அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை எப்போதும் தொடரச் செய்வதற்கும், கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதற்கும் நற்பேறு வழங்குவானாக. கிலாஃபத்துடன் அன்னார் நன்றியுணர்வுள்ள உறவை பேணி உள்ளார்கள். நான் இதைப் பார்த்துள்ளேன். என்னுடன் அன்னார் அவ்வாறே நடந்துள்ளார்கள். முழுமையான கட்டுப்படுதலையும், பணிவின் முன்னுதாரணத்தையும் அன்னாரிடம் நான் கண்டுள்ளேன். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு, மதிப்பிற்குரிய நாஸிர் அஹ்மது கான் சாஹிப் பஹாதுர்ஷேர் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய பிஸ்மில்லாஹ் பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜூன் மாதம் 14 ஆம் தேதி ஜெர்மனியில் தனது 84 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தையான ஹஸ்ரத் சவுத்ரி மஸ்ஹருல் ஹக் கான் சாஹிப் டக்டி அவர்கள் மூலமாக அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. காதியானில் Boarding School லும் பணி செய்வதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஒரு சட்டையை தபர்ருக் என்ற வடிவில் அன்னாருக்கு வழங்கி இருந்தார்கள். அன்னாருக்கு 5 மகள்களும், 2 மகன்களும் உள்ளனர். அன்னாரின் ஒரு மகனான மஹ்மூத் அஹ்மத் சாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பியாகவும், மிஷனரி இன்சார்ஜ் ஆகவும் இருக்கின்றார். ஃபிஜி நாட்டில் ஜமாஅத்தின் அமீராகவும் இருக்கின்றார். மஹ்மூத் அஹ்மத் சாஹிப் நமது முபல்லிக் ஆவார்.

அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: தந்தையார் அவர்களின் மரணத்திற்குப் பிறகு வயலிலிருந்து கிடைத்த தொகையில் முதல் முதலில் சந்தாவை செலுத்தி வந்தார்கள். தந்தையாரின் பென்ஷன் தொகையை சேமித்து வந்தார்கள். அதனை வேறு எதற்கும் பயன்படுத்த மாட்டார்கள். அந்த பணத்திலிருந்து தெற்கு தாஹிராபாதில் பள்ளிவாசல் கட்டினார்கள். அன்னார் எங்களுக்கு கிலாஃபத்தின் கரங்களை எப்போதும் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுரையை செய்து வந்தார்கள்.

பின்னர் எழுதுகின்றார்கள்: தந்தையின் மரணத்திற்குப் பிறகு எங்கள் அனைவருக்கும் தாய் மற்றும் தந்தையின் அன்பை வழங்கினார்கள். ஒருபோதும் தந்தை இல்லை என்ற உணர்வை எங்களுக்கு ஏற்பட விடவில்லை. நான் அப்போது ஜாமிஆவின் முதலாம் ஆண்டில் கல்வி பயின்று வந்தேன். அப்போது என்னிடம் பெரும்பாலும் இவ்வாறு கூறி வந்தார்கள். அதாவது நீ மார்க்கத்தின் போர் வீரனாவாய். நீ மார்க்கத்திற்காக வக்ஃப் செய்துள்ளாய். காலத்தின் கலீஃபா உங்களை எங்கு நிறுத்துவாரோ அங்கு நின்று கொள்ள வேண்டும். இறுதி வரை இதையே கூறி வந்தார்கள். துவக்கத்தில் எங்களது கிராமத்திலிருந்து எங்களது தந்தையார் மட்டுமே ரப்வாவில் வந்து குடிபெயர்ந்திருந்தார். அதன் காரணமாக எங்களது பெரும்பாலான அன்பர்களும், உறவுகளும் பெரும்பாலும் கிராமத்திலிருந்து ரப்வாவிற்கு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் தங்குவதற்கும், அவர்களின் உணவிற்கும் சிரித்த முகத்துடன் ஏற்பாட்டை செய்து வந்தார்கள். வெள்ளை மனதுடன் தனது தகுதியை விட அதிகமாக விருந்து உபசரிப்பு செய்து வந்தார்கள். அண்டை அயலாரின் உரிமைகளை கருத்தில் கொள்வதிலும் அன்னார் சிறப்புடன் செயல்பட்டு வந்தார்கள். எனது வகுப்புத் தோழிகளையும் எப்பொழுதும் தமது பிள்ளைகளைப் போன்று பாவித்து வந்தார்கள். வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள விடுதியில் தங்கியுள்ள பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்து வருமாறு என்னிடம் பெரும்பாலும் கூறி வருவார்கள். அதன் மூலம் அவர்களின் உள்ளம் ஜாமிஆவில் நிலைபெற வேண்டும் என்பதற்காக அவ்வாறு கூறி வந்தார்கள்.

எனது மதிப்பிற்குரிய தாயின் பரிவு ஜாமிஆவின் பெரும்பாலான மாணவர்களுக்கு கிடைத்து வந்தது. அதற்கு பல முரப்பிகள் சாட்சிகளாக உள்ளனர். பாகிஸ்தான் மட்டுமல்லாது இந்தோனேஷியா மற்றும் ஆப்ரிக்க நாடுகளின் மாணவர்களும் தாயின் இந்த பரிவில் பங்கு பெற்றுள்ளனர். அவர்களிடத்தில் இருந்த பணத்தை பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். அல்லது சந்தாவாக செலுத்தி விடுவார்கள். ஆயினும் சிறிது பணத்தை உங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவதற்கு எவருக்கும் தைரியம் இருந்ததில்லை.

முரப்பி சாஹிப் அவர்கள் செயல் களத்தில் இருந்ததன் காரணமாக நான் ஏற்கனவே கூறியது போன்று ஃபிஜி நாட்டில் மிஷனரி இன்சார்ஜ் ஆகவும், அமீராகவும் அன்னார் இருக்கின்றார்கள். எனவே ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அன்னாருக்கும் பொறுமை மற்றும் அமைதியை வழங்குவானாக. அன்னாரின் ஏனைய பிள்ளைகளுக்கும் பொறுமையை வழங்குவானாக. அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை அன்னாரது பிள்ளைகளுக்கும் வழங்குவானாக. அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு கர்னல் ஜாவீர் ரஷீதி சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் சவுத்ரி அப்துல் கனீ ரஷீதி சாஹிப் ராவல்பிண்டியின் மகனாக இருந்தார்கள். சிறிது காலம் முன்பு அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இறைவனின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு எப்போதும் ஜமாஅத்தின் தொண்டில் மும்முரமாக இருந்தார்கள். தஃலீம் செயலராகவும், வக்ஃபே ஜதீத் செயலராகவும், திருமண பந்த செயலராகவும் அது மட்டுமல்லாமல் ஹல்காவின் வஸிய்யத் செயலராகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றுள்ளார்கள். மூன்று முறை ராவல்பிண்டியின் ஹல்கா சேடிலைட் டவுனின் சத்ராக இருந்துள்ளார்கள். மிகவும் துஆ செய்யக்கூடிய மனிதராக இருந்தார்கள். மௌனமாக மக்களுக்கு உதவி செய்து வந்தார்கள். அனுதாப உணர்வு கொண்டவராக இருந்தார்கள். உறவினர்கள், அண்டை அயலார்கள் மற்றும் ஏனைய நபர்களுக்கு எப்போதும் கஷ்டமான நிலைமைகளில் உதவியும், வழிகாட்டலும் செய்து வந்தார்கள். ஒரு நல்ல நிர்வாகியாகவும், விவகாரங்களை புரியும் மனிதராகவும் இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகையையும் நான் தொழ வைப்பேன். (இன்ஷா அல்லாஹ்)

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 29 July 2021 Issue No. 30

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

காலகட்டம் ஷிர்க்கின் காலகட்டத்திற்கு முன்பாக வருகின்றது. இந்த விதிமுறைக்கேற்ப ஏகத்துவம் இல்ஹாமிய விஷயம் என்றும், இணை வைத்தல் வீழ்ச்சிக்குரிய ஓர் இடம் என்றும் ஒப்புக் கொள்ள நேரிடுகின்றது. இதற்கு எதிராக மார்க்க ஆராய்ச்சியாளர்களின் இந்த அடிப்படை அதாவது அவர்களைப் பொறுத்தவரை அல்லாஹ்வைப் பற்றிய எண்ணம் என்பது அச்சம் மற்றும் ஆச்சரியத்தால் உருவாகின்றது. மேலும் ஷிர்க்கிலிருந்து முன்னேற்றம் கண்டு ஏகத்துவம் என்ற புள்ளியை அடைந்துள்ளது. வெளிப்படையில் இந்த கருத்து வேறுபாடு சாதாரணமானதாக தோன்றுகின்றது. ஆனால் மனிதனை இறைவன் படைத்தான் என்று இதே கருத்து வேறுபாட்டின் விளைவாகவே மார்க்கம் கூறுகின்றது. ஆனால் மார்க்க ஆராய்ச்சியாளர்கள் மனிதன் இறைவனை படைத்தான் என்று கூறுகின்றனர். அதாவது இறைவனைப் பற்றிய எண்ணம் என்பது மனித மூளையின் கண்டுபிடிப்பாகும். மேலும் மனித தத்துவத்தின் முழுமையின் மூலமாக அது முழுமை பெறுகின்றது என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இந்த வசனத்திலிருந்து இந்த கேள்வியும் எழுகின்றது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களால் ஷிர்க் செய்திருக்க முடியுமா? இல்லையென்றால் இறைவா என்னை இணைவைத்தலிலிருந்து பாதுகாப்பாயாக என்று அன்னார் ஏன் துஆ செய்தார்கள்? இதற்கான பதில் என்னவென்றால், மனிதனின் ஆற்றல்கள் இரு வகைப்படுகின்றன. ஒன்று, இயற்கையாகவே அல்லாஹ் அவனுக்கு வழங்கியதாகும். அது தொடர்பாக அவன் துஆ செய்வதில்லை. உதாரணமாக, இறைவா! எனக்கு ஒரே ஒரு தலை தான் இருக்க வேண்டும். இரண்டு தலை ஆகிவிடக்கூடாது என்று அவன் துஆ செய்வதில்லை.

இரண்டாவது ஆற்றல் என்னவென்றால், அது மனிதனின் உழைப்பால் அல்லது அன்பளிப்பாக அவனுக்கு கிடைப்பதாகும். அதாவது அவன் சுயம் முன்னேற்றம் அடைந்து அதைப் பெற்றுக் கொள்கின்றான். அல்லது அல்லாஹ்வின் சிறப்பான அருள் மற்ற மனிதர்களிலிருந்து வித்தியாசப்படுத்தி அவனுக்கு வழங்குகின்றது. அதுபோன்ற ஆற்றல்களில் வீழ்ச்சிக்கான வாய்ப்பும் உள்ளது. அதற்காக துஆவை தொடர்ந்து செய்ய வேண்டியதுள்ளது. அந்த அருட்கொடையிலிருந்து அவருக்கு வழங்கப்படும் என்று அல்லாஹ்வின் வாக்குறுதி இருந்தாலும் சரியே! ஏனென்றால் இந்த துஆவில் உண்மையில் இந்த விஷயம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது இந்த அருட்கொடை எனது சொந்த அருட்கொடை அல்ல. மாறாக, இறைவனிடமிருந்து அன்பளிப்பாக கிடைத்துள்ளது.

இதே அடிப்படையின் கீழ் நபிமார்கள் நபித்துவத்தின் அருட்கொடைகளைக் குறித்தும் துஆவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் இந்த துஆ ஆகும். அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் رَبِّ زِدْنِیْ عِلْمًا என்ற இந்த துஆ ஆகும். அல்லது நபிமார்களிடமிருந்து வெளிப்படுகின்ற இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா ஆகும். இந்த கருத்தை புரியாததன் காரணமாக சில மக்கள் நபிமார்களின் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பாவைக் கண்டு ஏமாற்றத்திற்கு ஆளாகி விடுகின்றனர். ஒருவகையில் அவர்கள் பாவம் செய்தவர்களாக இருந்தார்கள் என்று புரிந்து கொள்கின்றனர். ஆனால் உள்ளபடியே அவர்களின் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பாவின் பொருள் என்னவென்றால், அவர்கள் தூய்மையில் எந்த அந்தஸ்தில் நிலைபெற்றுள்ளார்களோ அது இறைவன் புறமிருந்து கிடைத்த ஓர் அன்பளிப்பாகும். அதனை தொடரச் செய்வதற்காக அவர்கள் துஆ செய்கின்றார்கள். ஏனென்றால், அல்லாஹ்வின் அருளால் மட்டுமே அது தொடர்கின்றது. இதே அடிப்படையில் தான் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُتَوَكِّلُوْنَ என்று வருகின்றது. அதாவது சிறப்புகள் இருப்பினும் மனிதனுக்கு அல்லாஹ்வின் மீது மட்டுமே நம்பிக்கை இருக்க வேண்டும். ஏனென்றால் இறைவன் மீதான நம்பிக்கையின் காரணமாகவே அந்த சிறப்புகள் கிடைத்துள்ளன. இந்த தேவையை ஒப்புக் கொண்டு இருப்பது தமக்கும் மற்றவர்களுக்கும் நேர்வழியின் காரணியாக அமைகின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 483 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*(மல்ஃபூஸாத்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

உண்மைத்துவத்தையும், இரகசியத்தையும் அவர்கள் புரிந்து கொள்வதே இல்லை. அவர்கள் தங்கள் மூதாதையர்களிடமிருந்து ஒரு சொல்லை மட்டுமே செவிமடுத்துள்ளனர். ஆனால் அதன் உண்மைத்துவத்தை அறியாதவர்களாக உள்ளனர். கத்மே நுபுவ்வத் என்றால் என்ன? என்பதை அவர்கள் அறிவதில்லை. அதன் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள் என்ன? என்பதையும் அவர்கள் அறிவதில்லை. ஆனால் நாங்கள் முழுமையான அகப்பார்வையுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்று நம்புகின்றோம். (இதனை அல்லாஹ் நன்கு அறிகின்றான்).

இறைவன் கத்மே நுபுவத்தின் உண்மைத்துவத்தை எம்மிடம் வெளிப்படுத்தி தந்துள்ளான். எந்த அளவுக்கு என்றால் அதன் ஞானத்தின் பானத்தை எங்களை அருந்தச் செய்துள்ளான். அதன் மூலம் நாங்கள் ஒரு சிறப்பான இன்பத்தை பெறுகின்றோம். அந்த நீரூற்றிலிருந்து தாகத்தை தணித்துக் கொண்டவர்களைத் தவிர வேறு எவரும் அதனை அறிய முடியாது. உலக உதாரணங்களில் கத்மே நுபுவ்வத்தின் உதாரணமாக நாம் இவ்வாறு வழங்க முடியும். அதாவது நிலவு பிறையிலிருந்தே ஆரம்பமாகிறது. 14வது தேதி அது முழுமையை அடைகின்றது. அப்போது அது பத்ர் என்று அழைக்கப்படுகின்றது.

இதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நபித்துவத்தின் சிறப்புகள் முழுமை பெற்று விட்டன. நபித்துவம் வலுக்கட்டாயமாக முடிந்து விட்டது என்றும், யூனுஸ் பின் மதா அவர்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடாது என்றும் எவர் கருதுகின்றாரோ அவர் இதன் உண்மைத்துவத்தை புரியவே இல்லை.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருட்கள் மற்றும் சிறப்புகளைப் பற்றி அவர்களுக்கு எந்த அறிவும் இல்லை. இந்த அளவிற்கு பலவீனமான புரிதலும், குறை மதியும் கொண்ட அவர்கள் நம்மைப் பார்த்து கத்மே நுபுவ்வத்தை நிராகரிப்பவர்கள் என்று கூறுகின்றனர். நான் அதுபோன்ற நோயாளிகளைப் பற்றி என்ன கூறுவது? அவர்கள் மீது நான் பரிதாபப்படுகின்றேன். அவர்களின் நிலை இவ்வாறு ஆகாமல் இருந்திருந்தால், அவர்கள் இஸ்லாத்திலிருந்து முற்றிலும் தொலைவில் விலகிச் செல்லாமல் இருந்திருந்தால் பின்னர் எனது வருகைக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? அந்த மக்களின் ஈமானிய நிலைகள் மிகவும் பலவீனமாகி விட்டன. இஸ்லாத்தின் பொருள் மற்றும் நோக்கத்தை அவர்கள் முற்றிலும் அறியாதவர்களாக உள்ளனர். அவ்வாறு அவர்கள் ஆகாமல் இருந்திருந்தால் உண்மையாளர்களுடன் பகைமை கொண்டு அதன் விளைவாக நிராகரிக்கப்பாளராக ஆக்கக்கூடிய நிலைமைக்கு எந்த காரணமும் இருந்திருக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 311– 313 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad